# Saturday மெயில்

02 - 61

27-11-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin




# விண்வெளியை சுத்தம் செய்ய

# 9 ஆயிரம் கோடி ரூபிள்கள்

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மிதக்கும் நகரங்கள்



உலகில் தற்போது சுற்றுச்சூழல் மாசு ஏற்பட்டுள்ளது.அதிகப்படியான கார்பன் வெளியேற்றப்படுவதால் இதுபோன்ற மாசு ஏற்பட்டு மக்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

எனவே, சுற்றுச்சூழல் மாசு ஏற்படாத வகையில் கடலில் மிதக்கும் நகரங்களை உருவாக்க ஜப்பான் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.ஜப்பானில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கடலில் மிதக்கும் நிலங்களை உருவாக்கி அதன் மூலம் விவசாயம் செய்யப்படுகிறது.கடலில் எங்கு பார்த்தாலும் பசுமை மயமாக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிதக்கும் நகரங்கள் உருவாக்கப்பட உள்ளன.இந்த திட்டம் பசுபிக் கடலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.கடலில் 1 கி.மீற்றர் தூரத்துக்கு நகரம் அமைக்கப்படவுள்ளது. இங்கு 10 ஆயிரம் முதல் 50 ஆயிரம் மக்கள் வரை வாழமுடியும்.இந்த நகரங்களை இணைக்கும் வகையில் மிதக்கும் வீதிகள் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் நகரங்கள் மற்றும் கிராமங்களில் புல்வெளிகள் மற்றும் வனப்பகுதியும் உருவாக்கப்படுகிறது.இவை மிக மெல்லிய உலோக கலவையுடன் கடல் நீரில் உள்ள மெக்னீசியம் மூலம் தயாரிக்கப்படும் உலோகத்துடன் கலந்து உருவாக்கப்படும்.எதிர்காலத்தில் இது போன்ற கற்பனை நகரம் அமைக்கப்பட்டால் சுற்றுச்சூழல் மாடுபடாத புதிய சமுதாயம் ஏற்படும்.

# பூனைக்குக் கிடைத்த நீதி

லண்டனைச் சேர்ந்த பெண்மணி பேல் (வயது 42) ஒருநாள் காரில் சென்று கொண்டிருந்த அவர் திடீரென்று ஒரு குப்பைத்தொட்டி அருகே நின்றார். எதையோ குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்துவிட்டார். அந்தக் குப்பைத் தொட்டியிலிருந்து குழந்தை அழுவது போன்ற முனகல் சத்தம் கேட்டது. ஒரு பொலிஸ்காரர் அருகே சென்று பார்த்தபோது அது குழந்தையல்ல வளர்ப்புப் பூனை என்று தெரியவந்தது. அதைக் காப்பாற்றி விசாரணை நடத்தியதில் பேல் பிடிபட்டார். மிருகவதைச் சட்டத்தின் கீழ் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.நீதிபதி இந்தக் குற்றத்திற்கு உங்களுக்கு மூன்று இலட்சம் ரூபா அபராதம் அல்லது 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்க முடியும். ஏன் இப்படிச் செய்தீர்கள் என்று கேட்டார். கடந்த வாரம் தன் தந்தை இறந்துவிட்டதால் குழப்பமான மனநிலையில் இருந்ததாக அந்தப்பெண் விளக்கம் கூறினார். இதைக்கேட்ட நீதிபதி அது உண்மையில் குழப்பமான சூழல்தான். எனவே,குறைந்தபட்ச தண்டனையாக 17 ஆயிரத்து ஐநூறு ரூபா அபராதம் விதிப்பதாகத் தீர்ப்புக் கூறினார். ஆனால்,அங்குள்ள ஒரு மிருகவதைத் தடுப்பு அமைப்பு அந்தப் பெண்மணியிடம் குறைந்தபட்சம் 84 ஆயிரம் ரூபாவாவது அபராதம் வசூலிக்க வேண்டும் என்று மேன்முறையீடு செய்துள்ளது.



# அதிசயத் தீவில் வெடிகுண்டுகள்



கலாபாகோஸ் தீவுகள் உங்களுக்கு நினைவிருக்கிறதா? மனிதன் குரங்கில் இருந்து வந்தவன் என்று விஞ்ஞானி டார்வின் அறிவிப்பதற்கு அடிப்படை ஆதாரங்களை இந்தத் தீவில்தான் கண்டுபிடித்தார். இந்த அதிசயத் தீவில் தற்போது மேலும் ஒரு அபூர்வ அதிர்ச்சிப் புதையல் கிடைத்துள்ளது. ஈக்குவடார் நாட்டின் கட்டுப்பாட்டில் இருக்கும் தீவுக் கூட்டம்தான் இது. இதில் பார்தலோம் தீவு என்றொரு குட்டித்தீவு இருக்கிறது. இந்தத் தீவிற்கு சில சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு மீனவர் சென்றார்.அவர்கள் தீவில் காலடி வைத்ததும் ஏதோ பெரிய மீன்கள் கரையொதுங்கிக் கிடந்ததுபோல் தெரிந்தது. சுற்றுலாப் பயணிகளும் அவரும் ஆர்வத்தோடு ஓடிச்சென்று அவற்றைச் சூழ்ந்து கொண்டனர்.அப்போதுதான் அது வெடிகுண்டுகள் என்று தெரியவந்தது. உடனே பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்க சோதனை நடத்தப்பட்டதில் ஒரு டசின் (12) குண்டுகள் புதையல்போல இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆள்நடமாட்டம் இல்லாத தீவில் இராட்சத குண்டுகளைப் பதுக்கியது யார் என்று விசாரித்தபோது அவை இரண்டாம் உலகப்போரில் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்ட குண்டுகள் என்று தெரியவந்தது. 70 ஆண்டுகளாக வெடிக்காமல் இருந்தாலும் அவை சக்தியை இழக்காமல் இருந்ததுதான் இதில் கவனிக்கத்தக்கது.

**விண்வெளியை...**

பூமியைச் சுற்றியுள்ள விண்வெளி பகுதியைச் சுத்தம் செய்ய ரஷ்யா 9,000 கோடி ரூபிள்களை செலவிட திட்டமிட்டுள்ளது.

பல்வேறு ஆராய்ச்சிகளுக்காக உலக நாடுகள் அவ்வப்போது செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி வருகின்றன. இவை குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு செயலிழந்து விடுகின்றன.இன்னும் சில செயற்கைக்கோள்கள் தோல்வியடைகின்றன. இதனால் ஏற்படும் கழிவுப்பொருட்கள் வானத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை தடுப்பதற்காக உடைந்த செயற்கைக் கோள்களின் பாகங்களை அகற்றுவதற்காகவே ரஷ்ய விண்வெளி கழகம் (எனர்ஜியா) திட்டமிட்டுள்ளது. இதற்காக 9 ஆயிரம் கோடி ரூபிள்கள் செல...வில் அணுசக்தியில் இயங்கும் ஒரு செயற்கைக் கோள் விண்வெளிக்கு அனுப்பப்படும்.இது மிதக்கும் கழிவுகளை பூமியை நோக்கி தள்ளிவிடும்.

பூமியில் இருந்து விண்வெளி ஆராய்ச்சிக்காக அனுப்பப்படும் ராக்கட்டுகள், விண்கலங்கள், செயற்கைக் கோள்கள் ஆகியவற்றின் கழிவுகள் விண்வெளியில் தேங்கியுள்ளதால் அதனை சுத்தம் செய்யும் நோக்கிலேயே ரஷ்ய விண்வெளிக் கழகம் 9 ஆயிரம் கோடி ரூபிள்களை ஒதுக்கியுள்ளது.

அடுத்த 10 ஆண்டுகளுக்குள் சுமார் 600 செயற்கைக் கோள்களின் உடைந்த பாகங்கள் விண்வெளியிலிருந்து அகற்றப்படுமென 'எனர்ஜியா' தெரிவித்துள்ளது. எனினும் இச்செயற்கைக்கோள் 2020 இல் தான் தயாராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கும் பாராளுமன்றம்

2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான விவாதங்கள் ஆரம்பிக்கப்பட்டு இன்று சனிக்கிழமையுடன் 5 நாட்கள் நிறைவுறும் நிலையில் வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதங்கள் சூடுபிடிக்காததால் பாராளுமன்ற அமர்வுகள் உப்புச்சப்பில்லாதவையாகவேயுள்ளன.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ தனது அரசின் 6 ஆவது வரவு-செலவுத் திட்டத்தையும் தனது இரண்டாவது பதவியேற்பின் பின்னரான முதலாவது வரவு-செலவுத் திட்டத்தையும் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 1.40 மணிக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அரச தரப்பினரின் ஆதரவாளர்களுக்கு மத்தியில் 2 மணித்தியாலமும் 15 நிமிடங்களும் சபையில் உரை நிகழ்த்தினார்.

இதனையடுத்து மறுநாள் செவ்வாய்க்கிழமை முதல் வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதம் ஆரம்பமானது.விவாதத்தை வழக்கம் போலவே எதிர்க்கட்சித்தரப்பில் ஐ.தே.க. வின் கொழும்பு மாவட்ட எம்.பி.ரவி கருணாநாயக்க ஆரம்பித்து வைத்து நீண்ட நேரம் அரச தரப்பினரின் குறுக்கீடுகள்,கூச்சல்கள்,குழப்பங்களுக்கு மத்தியில் உரையாற்றி 2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மக்களுக்கு பிரயோசனமற்றது என்று கூறி முடித்தார்.

இதனைத் தொடர்ந்து இன்று வரை வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதங்கள் இடம்பெற்று வருகின்ற போதும் அவற்றில் சூடோ சுவாரஸ்யமோ இல்லாமல் உள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆசனங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.இருக்கும் ஓரிரண்டு உறுப்பினர்களும் நிம்மதியாக எந்த இடையூறுமின்றி தூங்குகின்றனர்.சிலர் குறட்டை விடும் சத்தம் கூட கலரிகளில் அமர்ந்திருப்பவர்களுக்கு கேட்குமளவுக்கு ஆழ்ந்து தூங்குகின்றனர்.

வரவு-செலவுத்திட்டத்தை குறைகூற வேண்டும் என்பதை மட்டும் நோக்கமாகக்கொண்ட எதிர்க்கட்சியினர் அதனை குறைகூறுவதிலேயே குறியாக இருக்க வரவு-செலவுத்திட்டம் நிறைவானது என்று கூறவேண்டும் என்பதையே கொள்கையாகக்கொண்ட அரசதரப்பினர் அதனை சிறந்தது என்று கூறுவதிலும் குறியாக இருந்தனர்.அதிலும் பலர் ஜனாதிபதியை புகழ்பாடுவதிலேயே தமது நேரத்தை செலவிட்டனர்.

எதிர்க்கட்சியினர் வரவு-செலவுத்திட்டத்தில் உள்ள எந்த நிறைகளையும் சுட்டிக்காட்டவில்லை. குறைகள் மட்டுமே அவர்களின் கண்களுக்கு தெரிந்துள்ளன. அதேபோல் வரவு-செலவுத்திட்டத்திலும் உள்ள எந்தக்குறைகளையும் அரச தரப்பினர் ஒப்புக்கொள்ளவில்லை.அவர்களின் கண்களுக்கு வரவு-செலவுத்திட்டத்திலுள்ள நிறைகள் மட்டுமே தெரிந்துள்ளன. இதனால் குற்றம் சுமத்தும் விவாதங்கள் இடம்பெற்றனவே தவிர விடயதானத்துடனான விவாதம் இன்று வரை நடைபெறவில்லையென்றே கூறலாம்.

ஆனாலும்,எதிர்க்கட்சியினரின் விவாதங்களுக்குள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி.சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் மற்றும் ஜனநாயக தேசியக்கூட்டணியின் கொழும்பு மாவட்ட எம்.பி.சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோரின் உரைகள் காத்திரமானதும் அர்த்த புஷ்டியாகவும் இருந்தன.இதற்குள் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.யின் உரை ஆக்ரோஷமாகவும் அதிரடியாகவும் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

தினமும் காலையில் ஓரளவு சுமாராக இருக்கும் விவாதங்கள் பிற்பகல் மந்தகதிக்கு சென்று விடுவதையே வழக்கமாக கொண்டுள்ளன.உரையாற்றும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சர்கள் எம்.பி.க்கள் சபைக்கு வருகை தராத நிலை அதிகமாகக் காணப்பட்டது.அத்துடன் அரச தரப்பைச் சேர்ந்த புதிய எம்.பி.க்களும் இளம் எம்.பி.களும் அதிகமாக வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றினார்கள். சிலவேளைகளில் தொடர்ந்து அரச தரப்பினரே உரையாற்றியதையும் காணமுடிந்தது.

வரவு -செலவுத்திட்ட விவாதத்தை சிறப்பாக முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிக்கேயுண்டு. ஆனால் எதிர்க்கட்சியினர் ஏனோதானோ என்று சபைக்கு வந்து சென்றனர். அமைச்சர்களிலும் முக்கியமானவர்கள் பலரை சபையில் காணமுடியாத நிலையும் இருந்தது.வந்தார்கள், பேசினார்கள், சென்றார்கள் என்பது போலவே சபைக்கு வந்து உடனே பேசிவிட்டு உடனே சென்றுவிடுகிறார்கள். இதனால் சபை எந்தநேரமும் வெறிச்சோடியே காணப்படுகிறது.


வழக்கமாக வரவு-செலவுத்திட்ட விவாதங்கள் என்றால் அனல்பறப்பனவாக இருக்கும்.சூடு சுவாரஷ்யம் நிறைந்திருக்கும்.வாதப்பிரதிவாதங்களில் உறுப்பினர்கள் முட்டி மோதிக்கொள்வார்கள்.

ஆனால், 2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் இன்று வரை அப்படியானதொரு நிலையைக் காணமுடியவில்லை..உறுப்பினர்கள் பலர் நிம்மதியாக தூங்குவதையே காணமுடிகின்றது.



பா.கிருபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது மனிதக் காதல் அல்ல

இனிவரும் காலம் ரோபோக்களின் காலமாக மலரப் போகிறது. கம்பியூட்டர்கள் கையில் மனிதர்கள் இப்போது சிக்கியிருப்பதைப் போல எதிர்காலத்தில் ரோபோக்கள்தான் மனிதர்களின் உற்ற துணையாக விளங்கப் போகின்றன. இதில் செக்ஸ் விடயத்தில் ரோபோக்கள்தான் இனி மனிதர்களுக்குப் பெரும் துணையாக இருக்குமாம்.

அமெரிக்காவைச் சேர்ந்த ரோபோட்டிக்ஸ் விஞ்ஞானியும் பிரபல ஐரோபோட் நிறுவனத்தின் நிறுவனரும் முன்னாள் தலைவருமான பேராசிரியர் ரோட்னி ப்ருக்ஸ் இது குறித்துக் கூறுகையில்;

தொழில்நுட்பம் முன்பை விட படு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த தொழில்நுட்ப வளர்ச்சி செக்ஸ் விடயங்களுக்கும் எதிர்காலத்தில் பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

நாம் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு தொழில்நுட்பத்தையும் செக்ஸ் தொடர்பானவற்றுக்கும் பயன்படுத்த முடியும். முதலில் புகைப்படங்கள் வந்தன. அவற்றுக்கும் செக்ஸுக்கும் இடையிலான தொடர்பு உலகறிந்தது. பின்னர் வீடியோ வந்தது. அதற்கும் செக்ஸுக்கும் இடையிலான தொடர்பு உலகறிந்தது. பின்னர் வீடியோ வந்தது. அதற்கும் செக்ஸுக்கும் இடையிலான தொடர்பு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பிறகு இணையத்தளம் வந்தது. அதன் முக்கிய பலமாகவே செக்ஸ் மாறியுள்ளது. அடுத்து ரோபோக்களின் காலம். எனவே, செக்ஸ் மகிழ்ச்சிக்கு ரோபோக்களும் பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

இருப்பினும் செக்ஸ் தொடர்பான விடயங்களுக்காக மட்டும் பிரத்தியேகமாக ரோபோக்கள் தயாரிக்கப்படுமா என்பதை இப்போதே கணிக்க முடியாது. இருப்பினும் அதற்கான வாய்ப்புகள் இல்லை என்று கூறிவிட முடியாது. ஆனால், அதற்குக் காலம் பிடிக்கும்.

ரோபோட் செக்ஸ் பொம்மைகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ரோபோக்கள் தயாரிக்கப்படுமா என்பதை இப்போதே கணிக்க முடியாது. இருப்பினும் அதற்கான வாய்ப்புகள் இல்லை என்று கூறிவிட முடியாது. ஆனால், அதற்குக் காலம் பிடிக்கும்.

ரோபோட் செக்ஸ் பொம்மைகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ரிமோட் கன்ட்ரோல் மூலம் ரோபோக்களை நமது செக்ஸ் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்த முடியும். அதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதீத ஆர்வத்தில் ரோபோட்களை மனிதர்கள் கல்யாணம் செய்து கொள்ளும் அளவுக்குக் கூட நிலைமை எதிர்காலத்தில் போகலாம்.

ஆனால், இதெல்லாம் நடக்க இன்னும் 300 ஆண்டுகளாவது ஆகலாம். நடக்கும் என்று கூற முடியாவிட்டாலும் கூட நடக்காது என்று நிச்சயம் நம்மால் கூற முடியாது என்றார் அவர்.

ரோபோக்கள் குறித்த ஆய்வில் ஈடுபட்டுள்ளவரான டேவிட் லெவி கூறுகையில்;

ரோபோக்களுடன் செக்ஸ் என்பது வேடிக்கையானது. அதேசமயம், நான் ரோபோவுடன் செக்ஸ் வைத்துக் கொண்டேன். செமையாக இருந்தது என்று யாராவது காஸ்மோ போன்ற புகழ்பெற்ற பத்திரிகைக்கு பேட்டி கொடுத்து விட்டால் அது காட்டுத் தீபோல பரவ வாய்ப்புண்டு என்பதை மறுக்கமாட்டேன் என்கிறார் லெவி. இவர் மனிதன் ரோபோ இடையிலான உறவுகள் குறித்த ஆய்வை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை. இப்போதே செக்ஸ் உணர்வுகளைத் தணிப்பதற்காக ஏகப்பட்ட இலத்திரனியல் சமாசாரங்கள் சந்தையில் கிடைக்கின்றன. சுய இன்பப் பிரியர்களின் ஏகபோக வரவேற்புடன் இவை விற்பனையாகி வருகின்றன. எனவே, எதிர்காலத்தில் இவர்களுடன் ரோபோக்களும் இணைந்து ரோமியோக்களாகும் வாய்ப்பை மறுக்க முடியாது.


ஆக ஆண்-பெண் உறவு, ஆண்-ஆண் உறவு, பெண்-பெண் உறவு என்ற வரிசையில் இன்னும் சில நூற்றாண்டுகளில் மனிதர்கள் ரோபோ இடையிலான காதல் கதைகளை நாம் இலத்திரனியல் சஞ்சிகைகளில் படித்து ரசிக்கலாம். மனிதர் உணர்ந்து கொள்ள இது மனிதக் காதல் அல்ல என்ற பாடல் வரி அப்போது செம பொருத்தமாக இருக்கும்.

## இது நடப்பது சீனாவில்...



திருமணமானதும் சீன ஜோடிகள் செய்யும் முதல் காரியம் என்ன தெரியுமா ...முதலிரவு தானே என்று கேட்டு விடாதீர்கள். அதற்கு முன்பே இந்த ஜோடிகள் நேராக ஸ்டூடியோக்களுக்குப் போகிறார்களாம். நிர்வாணமாக போஸ் கொடுத்து புகைப்படங்களை எடுத்துக் கொள்கிறார்களாம். ஏன் இந்த விபரீதம்? வேறு ஒன்றுமில்லை...திருமணமான பிறகு கணவன் மனைவி இருவரின் உடல் அமைப்புமே மாறிப்போகிறது. இளமையாக வனப்பாக இருக்கும்போதே ஒரு நிர்வாணப் படம் எடுத்துக் கொண்டால் பின்னாளில் பார்த்து மகிழ உதவுமே. இன்னொன்று அதில் இருக்கும் கிக்கே தனி. இது தான் அந்த ஜோடிகள் தரும் விளக்கம். சீன நாட்டு சட்டப்படி இப்படி நிர்வாண புகைப் படங்கள் எடுத்துக் கொள்வது தப்பில்லையாம். அவற்றை பொதுவில் பார்வைக்கு விடுவது தான் பெரிய குற்றமாம். இதற்கிடையே இந்த மாதிரி படம் எடுக்க எந்த ஸ்டூடியோவையும் இனி அனுமதிக்கக்கூடாது என ஷாங்காய் திருமண வர்த்தகச் சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளது. ஆனால், தடைவிதிக்கக்கூடாது என நிர்வாணப்படம் எடுத்துக்கொண்ட ஏராளமான திருமண ஜோடிகள் குரல் கொடுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களியாட்ட விடுமுறைகளால் கலங்கும் மாணவர்கள்

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவந்த பல்வேறு நிகழ்வுகளுக்காக பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட விடுமுறைகள் கடந்த வருடங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளமையால் மாணவர்கள் கல்வி கற்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்கென வழங்கப்பட்டுள்ள பரீட்சைக்கான மீட்டல் விடுமுறை மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட விடுமுறைகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தின் களியாட்டங்களுக்காக விசேட விடுமுறைகள் வழங்கப்படுகின்றன.

வருடத்தில் விடுமுறை நாட்கள் போக மீதமுள்ள 210 நாட்களே பாடசாலை நாட்களாக கணிக்கப்பட்டுள்ளது.இதில் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற கலாசார நிகழ்வுகளினால் பாடசாலை நாட்கள் மேலும் குறைக்கப்பட்டன. இவ்வருடம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல், யுத்த வெற்றி, தேசத்திற்கு மகுடம் கண்காட்சி, ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விசேட விடுமுறைகள் எனத் தொடர்ந்து செல்கின்றன.

இவ்வாறான பாடசாலை விடுமுறைகளினால் உரிய காலத்தினுள் பாடத்திட்டத்தினை பூர்த்திசெய்ய முடியாதுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். அரச கொண்டாட்டங்களுக்காக தமது எதிர்காலத்தை பாதிப்படையச் செய்யும் வகையில் அரசு செயற்படுவதாக மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பிரபலமான பாடசாலையொன்றில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் மாணவியொருவர் கூறுகையில்;

"நான் டிசம்பர் மாதம் சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ளேன்.எனது பாடசாலையில் முறையாக பாடங்கள் நடைபெறுவதால் தனியார் வகுப்புகளுக்குச் செல்வதில்லை.பாடத்திட்டத்தில் ஒரிரு பகுதிகள் முடிவடையவுள்ள நிலையில் அரச கொண்டாட்டங்களுக்காக விடுமுறை வழங்குவதால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றேன்.

பரீட்சை ஆரம்பமாக இன்னும் ஒரிரு வாரங்கள் உள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவியேற்பிற்காக தரப்பட்ட இரண்டு நாள் விடுமுறையினால் பாடத்திட்டங்கள் இன்னும் தேங்கிக் கிடக்கின்றன. பாடங்கள் முடியாத நிலையில் பரீட்சைக்கு முகம் கொடுக்க பயமாகவுள்ளது" என்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு கொழும்பு-1, 2,3,4 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அரச பாடசாலைகளுக்கு மாத்திரம் விடுமுறை வழங்கப்பட்டதால் இப்பகுதி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விடுமுறையைத் தொடர்ந்து இந்த வாரம் பாடசாலையில் மாணவர்களின் வரவு விகிதம் குறைந்து சென்றுள்ளதாகவும் விடுமுறைகளுக்காக வீடுகளுக்குச் சென்றவர்கள் பாடசாலைகளுக்கு வந்து சேராமையால் பாடங்களை மேற்கொள்ள முடியாமல் ஆசிரியர்கள் காணப்படுவதாகவும் மேற்குறிப்பிட்ட பகுதிகளைச் சேர்ந்த அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.



விஞ்ஞான தொழில்நுட்பத்திலும் கல்வியிலும் சிறந்த நாடாக இலங்கை திகழ வேண்டுமென வெறுமனே வாய்ப்பேச்சாக மட்டுமன்றி செயலிலும் காண்பிக்கப்பட்டிருந்தால் வளர்முக நாடுகளைப் போன்று கல்வியிலும் வேகமாக முன்னேற முடிந்திருக்கும்.

ஆசியாவிலே வாசிப்புப் பழக்க விகிதம் அதிகம் உள்ள நாடாக இலங்கை காணப்படினும் நாட்டில் அதிகரித்துள்ள களியாட்டங்களினால் அறிவு விகிதத்தை வளர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கென வருடாந்தம் ஒருதொகை நிதியை கல்வியமைச்சு ஒதுக்கியுள்ள போதும் பல்வேறுபட்ட களியாட்டங்களினால் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்நிதி பயனற்று போகின்றதெனவும் கூறலாம்.

எனவே,நாட்டின் சிறந்த தலைவர்களை உருவாக்க வேண்டுமெனில் பாடசாலை நாட்களாக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள 210 நாட்களில் விசேட விடுமுறைகள் வழங்காமல் அரச கொண்டாட்டங்களை வார இறுதி நாட்களில் மேற்கொள்வதன் மூலம் நாட்டின் சிறந்த பிரஜைகளை உருவாக்க முடியும்.

அல்லது அவ்வாறு விடுமுறை வழங்கப்படும் பட்சத்தில் அந்த நாட்களை ஈடுசெய்யும் வகையில் சனி,ஞாயிறு போன்ற தினங்களில் பாடசாலைகளை நடத்தவேண்டும்.கல்வியில் தற்போது சிறந்து விளங்கும் எமது நாட்டை களியாட்டங்களினால் களங்கப்படுத்தி விடக்கூடாது.கல்விக்கு அதிக நிதி ஒதுக்கினால் மட்டும் போதாது.கல்வி கற்கக்கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதும் அரசின் கடமைதான்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனம் எயிட்ஸ்

எயிட்ஸ் நோய் பற்றி விழிப் படைய வேண்டியது காலத்தின் தேவையாகும். விழிப் புறத் தவறின் இப்போதுள்ள சமூக இருள் மிகமோசமான நரகத்தினுள் சென்று முடிவுறும்.என்பதுதான் நிஜம். தற்போது மெல்ல மெல்ல எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்படுவது இப்போது விழித்துக் கொண்டாலும் எம் சமூகம் அழிவிலிருந்து மீளும் என்பதன் சமிக்ஞை என்றுதான் கூற வேண்டும்.

கருச்சிதைவு பற்றி பத்திரிகைகளிலும் சமூகத்திலும் மிகவும் அதிகமாகவே பேசப்படுகின்றன. அதாவது மிகைப்படுத்தி அல்ல. உண்மையில் அவை அதிகரித்துவிட்ட நிலையைத் தான் குறிப்பிடுகின்றன.

பாலியலை மையப்படுத்தியே தொலைக்காட்சி விளம்பரங்கள் தொடக்கம் தொலைபேசி,வானொலி வரை வந்துவிட்ட நிலையில், இளம் வயதினரை உணர்விழக்கச் செய்யும் விதமாகவே இவை யாவும் நகர்கின்றன. இனங்காணப்பட்ட நோயாளிகளும் இளவயதினர் பாலியல் ரீதியாக இலக்கு வைக்கப்படும் வயது பத்திரிகையில் ஒருநோயாளி இனங்காணப்பட்டார் என்று ஒவ்வோர் தடவையும் வரும்போது மக்கள் அதனை ஒரு நோயாளி தானே என்று எண்ணுகின்றார்களோ தெரியவில்லை. அவற்றைச் சரியாக விளங்கிக் கொண்டால் ஒரு நோயாளி அல்ல பல நோயாளிகள் என்ற உண்மை தெளிவுறும்.

இதில் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் இந்த நோயாளிகள் யாவரும் தவறுதலாகவே இனங் காணப்படுகிறார்கள். மேலும், பாலியல் தொழில் திறந்த கலாசாரப் பின்னணியில் தனது முழுவீச்சுடன் நகருகின்றது. இந் நிலையில், இனங்காணப்பட்ட ஒவ்வொரு நோயாளியினதும் நோய்த் தொற்றுக்குக் காரணமான காவியை அடையாளம் காணும் பட்சத்தில் மிகப்பெரும் எண்ணிக்கையினர் எயிட்ஸ் நோயின் பிடியில் சிக்கிவிட்ட உண்மை நன்கு புலப்படும். இங்கு ஒரு பாலியல் தொழிலாளர் இனங்காணப்படினும் அவருடைய தொடர்பினால் குறைந்தபட்சம் 10 பேராவது தொற்றைப் பெற்றிருக்கும் வாய்ப்பே உள்ளது. எனவே, நாம் இங்கு சிந்திக்க வேண்டியதாகவே உள்ளது.



பாலியல் ரீதியான கவனக்கலைப்பான்களே மிகையாகப் பரவியுள்ள நிலையில்,குறுகிய கால இடைவெளியில் ஒருவர் ஒருவர் என்று பலர் இனங்காணப்படின்,எயிட்ஸ் நோய்க்கிருமி விதைக்கப்பட்ட நிலையொன்று உருவாகிவிட்டதா? என்று விடை காண வேண்டிய வினாவொன்று விருட்சம் போல வளர்ந்து நிற்கின்றது. இது இவ்வாறிருக்க பாலியல் நோய்கள் தொடர்பாக அறிந்துகொள்ள முடிவதில்லை. இங்குள்ள குறையாதென்றால் பாலியல் என்ற வரையறையில் தான் பாலியல் ரீதியாகப் பரவும் நோயின் நோயியல் காணப்படுகின்றது. பாலியல் தொடர்பான கருத்துகளை மக்கள் அறியவில்லை. ஆனால், சமூகத்தில் போதுமான அளவு பாலியல் சிந்தனை பரவியே உள்ளது. இதனால் பாலியல் ரீதியாகப் பரவும் நோயின் நோயியல் பற்றிய அறிவு மிகவும் பூச்சியம் என்றே கூறவேண்டியுள்ளது.

எனவே, நமது சமூகத்தில் தற்போது எல்லா வசதி வாய்ப்புகளும் அதிகரித்துவிட்டன. [எயிட்ஸ் கிருமி வரை] கலாசார சீரழிவுகள் மலிந்துவிட்டன. இந்த நிலையில், பாலியல் நோய்க்கான இனங்காணல் துரிதப்பட வேண்டும்.

அதாவது ஓர் சமூகத்தில் தொற்று நோய் பற்றிப் பார்த்தால் பனிக்கட்டியொன்று நீரில் அமிழ்ந்து மிதக்கும் போது நோய் இனம் காணப்படும் மக்கள் கூட்டம் நீரின்மேல் வெளிக்காணப்படும் பகுதியாகவும் இனங்காணப்படாத மக்கள் கூட்டம் நீரில் அமிழ்ந்து காணப்படும் பகுதியாகவும் காணப்படும்.

எனவே, நோய் தொடர்பான இனங்காணல் மிக முக்கியமாக உள்ளது. இது மிகவும் உயிர்த்துடிப்புடன் அமையவும் வேண்டும். இனங்காணப்படும் போது தரவுகள் எதுவும் வெளியிடப்படமாட்டா. இரகசியமாகவே பேணப்படும். இனங்காணப்படா தவறும் பட்சத்தில் ஒருவரால் பலர் தொற்றுக்கு ஆளாவதும் இன்னும் தாதியர்,ஆய்வுகூடப் பரிசோதகர்கள், சத்திர சிகிச்சை மருத்துவர்கள் போன்ற பலரும் எயிட்ஸ் நோயாளியை கையாளும்போது தாம் எடுத்துக் கொள்ளும் விசேட பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்து தவறி சாதாரண நோயாளிகளுடன் மேற்கொள்ளும் நடைமுறை கையாளப்படும்போது இவர்களும் தொற்று நோய்க்கு ஆளாகும் வாய்ப்புகுக அதிகமாகவே உள்ளது.

குருதி மாற்றீடு மற்றும் ஏனைய தொற்றால் ஏற்படக்கூடிய முறைகளின் ஊடாகவும் அநேகர் தொற்றுக்கு ஆளாதல் தவிர்க்க இது பெரிதும் உதவும். உயிர்த்துடிப்பான இனங்காணல் மேற்கொள்ளத்தவறின் சமூகம் பாதிப்புறும் என்பதே நியதி. இன்னும் கூறுவதானால் வருடாவருடம் விழிப்புணர்வல்ல. தினந்தோறும் விழிப்புணர்வு செய்யும் நிலையே இங்கு உருவாகிவிட்டதென்பதே உண்மை. விழி மனிதா விழி. இனியும் விழிக்கத்தவறின் உன்சமூகம் அழிந்துவிடும்.

டாக்டர்
வெ.நாகநாதன்
சிவாஜி மருத்துவ
ஆலோசனை மையம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவாகரத்துகள் அவசியமா...?

திருமணம் என்பது வாழ்வதற்கே.இன்று திருமணமானவுடனே விவாகரத்து செய்வது நாகரீகமாக மாறிவருகிறது.இதற்கு காரணம் என்ன? என்று அனைவரும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.தொழில் பார்க்கும் பெண்களோ விவாகரத்துக்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்றும் 25-30 வயத்துகுட்பட்டோரே இவர்களில் அதிகம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையிலே அது கவலை தரக்கூடிய விடயமே.இது எவ்வாறு ஏற்படுகிறது?இதனை எப்படி தீர்ப்பது?இனி வரும் காலங்களில் இவ்வாறான விவாகரத்துகள் ஏற்படாமல் தவிர்க்க என்ன வழி என்பதனை அனைவரும் கருத்தில் எடுத்து சிந்திக்க வேண்டும்.நாம் இதை செய்யத் தவறினால் நிச்சயதார்த்தம் அடுத்து திருமணம் என்று இருந்த காலம் போய் திருமணம்,விவாகரத்து என்ற காலம் உருவாகிவிடும்.

விவாகரத்து ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களாக;

மனம் ஒத்த திருமணங்கள் நடைபெறாமை

அதாவது மணமகள்,மணமகன் சம்மதத்தை கேட்பதில்லை.பெற்றோர் தாமாகவே திருமணங்களை பேசி முடித்து விடுவார்கள்.நாம் என்ன பிள்ளைகளுக்கு தீமையா செய்வோம் நல்லது தானே செய்கிறோம் என்ற எண்ணத்தில் அவர்களே முடிவு செய்துவிடுவார்கள்.இவர்களும் என்ன செய்வது என தெரியாது மனம் ஏற்காவிட்டாலும் பெற்றோர்களுக்காக திருமண பந்தத்தில் இணைகிறார்கள்.இங்கு இவர்கள் மனம் ஒத்து இணைகிறார்களா என்றால் இல்லை.சில பெற்றோர் பிள்ளைகளின் ஆசைகள் அவர்களின் எதிர்பார்ப்புகள் எதனையும் கருத்தில் கொள்வதில்லை.இவ்வாறான திருமணங்களில் சிறிது காலத்திலேயே மன வேற்றுமை ஏற்படுகிறது.இதனால் கருத்து முரண்பாடுகள் ஏற்படுகிறது.அவை விரிசலடைகிறது.அந்த விரிசல் மேலும் விரிவடைய விவாகரத்தை நாடுகின்றனர்.

**சீதனப் பிரச்சினையை தீர்ப்பதற்காக நடைபெறுபவை**

அதாவது சில வீடுகளில் சீதனம் ஒரு பிரச்சினை.சீதனம் இல்லை என்பதால் வசதியான ஒரு இடம் கிடைத்தவுடன் திருமணம் செய்து வைக்கிறார்கள்.வசதியுடன் இருப்பவர்களை பார்க்கிறார்கள்.வசதியுடன் இருப்பவர் நல்ல குணத்துடன் இருக்கிறாரா என பார்க்க தவறுகிறார்கள்.வசதி கூடியவர்கள் தமக்கு ஏற்ற போக்கில் சில விடயங்களை செய்வார்கள்.ஆனால் அது எல்லாவற்றையும் கண்டும் காணாதது போல் இருக்க முடியாது.அதனை கேட்க முற்படும்போது நீ என்னத்தை கொண்டு வந்தாய்.என் பணம் தான் என்ன என்றாலும் செய்வேன் என்று கூறி குடித்து கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பார்கள்.அவற்றை எவ்வளவு சொல்லியும் திருத்த முடியாவிட்டாலும் அவர்கள் விவாகரத்தே ஒரே வழியாகத் தோன்றுகிறது.

**வரட்டுக் கௌரவம் காட்டும் பெண்கள்**

**தொழில் பார்க்கும் பெண்கள் திருமணம் செய்து வைத்தவுடன் அவர்கள் தம் இஷ்டத்துக்கு வாழ ஆரம்பிக்கிறார்கள். தமக்கு தொழில் இருக்குத்தானே தாம் ஏன் அடங்கிப் போக வேண்டும் என்ற நிலை ஏற்படுகிறது. (எல்லா பெண்களும் இல்லை)**

தொழில் பார்க்கும் பெண்களே இன்று அதிகம் விவாகரத்திற்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. எனக்கு தொழில் உள்ளது.இவருக்கு நாம் ஏன் அடங்கிப் போக வேண்டும் என்ற போக்கிலே நான் செயற்படலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது.இதனால் சிறு பிரச்சினையும் பெரிதாகி பிளவு ஏற்படுகிறது.அதனை எப்படிச் சீர்செய்வது என சிந்திப்பதில்லை.உடனே விவாகரத்து அது தான் முடிவு என்ற நிலை ஏற்படுகிறது.பிரிவு ஏற்பட்டால் அதை சீர் செய்வது என்பது இன்று கௌரவ பிரச்சினையாகியுள்ளது.அவர்களுக்கு சுய கௌரவம் விட்டுக்கொடுக்காது அதனால் விவாகரத்தை நாடுகின்றனர்.

**காதல் விவகாரத்தால் ஏற்படுபவை**

அதாவது தமது பிள்ளைகள் காதலிக்கிறார்கள் என்று தெரிந்தவுடன் அவசர அவசரமாக வேறு இடத்தில் திருமணம் பேசி முடித்து விடுவார்கள்.ஏனெனில் இங்கு பெற்றோர் தம் சுயகௌரவத்தை பார்க்கிறார்கள்.தமக்கு ஏற்ற இடமில்லை.அதனால் தாம் திருமணம் செய்து வைக்க முடியாது என்று கூறி வேறு இடத்தில் திருமணம் பேசுவார்கள்.தமது தகுதிக்கேற்றவர்களை தானே காதலித்து இருக்கிறார்கள் என்று எண்ணுவதில்லை.பிள்ளைகள் சம்மதிக்காவிடின் நாம் உயிருடன் இருக்க வேண்டும் என்றால் இதற்கு சம்மதிக்க வேண்டும் என்று அடக்குகிறார்கள்.கட்டாயப்படுத்துகிறார்கள்.பெற்றோருக்காக திருமண பந்தத்தில் இணைகிறார்கள். இதில் பெற்றோர் தவறு இழைக்கிறார்கள்.தாம் கெட்டித்தனமாக வேறு இடத்தில் திருமணம் செய்து வைத்து விட்டோம் என சிந்திக்கிறார்களே தவிர முதலில் தம் பிள்ளை காதலித்த விடயம் தெரிந்தால் அதனால் ஏற்படப்போகும் பிரச்சினைகளை சிந்திக்க தவறுகிறார்கள்.அவர்கள் தம் பிள்ளை காதலித்த விடயத்தை மறைத்து ஏதோ ஒரு வழியாக தமக்கு ஏற்ற இடத்தில் திருமணம் செய்து வைத்து விட்டு தம் கௌரவம் காப்பாற்றப்பட்டதாக நினைக்கிறார்கள்.

ஆனால் இந்த பெண் காதலித்த விடயம் பின்னர் தெரியவர திருமணம் முடித்துப் போன இடத்தில் எத்தனையோ பிரச்சினைகள் இத னையே காரணம் காட்டி அவருடன் பிரச்சினை செய்வார்கள்.எதற்கு எடுத்தாலும் சந்தேகம் தோன்றும்.ஒவ்வொரு விடயத்திற்கும் ஏதோ ஒரு வழியில் முதலில் காதலித்த விடயத்தை காரணம் காட்டி பிரச்சினை ஏற்படும். எவ்வளவு தடவைதான் பிரச்சினையை தாங்குவாள்.முடியாதவிடத்து விவாகரத்தை நாடுகிறாள்.இங்கு அந்த பெண் காதலித்ததையே குற்றம் போல் ஏனையோர் கருதுவர். ஆனால் இங்கு அந்தப் பெண்ணைக் குறைகூற முடியாது.கௌரவம் பார்த்து செய்த பெற்றோர் தான் குற்றவாளி.முதலிலே கௌரவம் பார்ப்பவர்கள் இப்படி இந்த பெண் விவாகரத்து எடுத்தால் அவர்கள் கௌரவம் என்ன ஆவது?

**விவாகரத்து ஏற்படாது எப்படி பிரச்சினையை தீர்ப்பது என்று சிந்தித்து முதலிலே செயற்பட வேண்டும்.முதலிலே திருமணம் பேசும் போது தமது பிள்ளைகளின் விருப்பங்கள் சம்மதங்களை கேட்க வேண்டும்.நாம் நமது பிள்ளைகளுக்கு தீமையா செய்வோம் நன்மையைத் தானே செய்வோம் என்று தான்தோன்றித்தனமாக சிந்திப்பதை முதலில் பெற்றோர் நிறுத்த** வேண்டும்.பிள்ளைகளுடன் கலந்து கதைத்து அவர்களுடைய சம்மதத்தை முதலில் பெற வேண்டும்.ஆதியிலே தான் மணமேடையில் மணமக்கள் சந்திக்கின்ற காலம். இப்போது அப்படி இல்லை. பெற்றோர் பிள்ளைகளுடன் நண்பர்கள் போல் பழகும் காலம். அவர்களுடன் கதைத்து அவர்கள் விருப்பு வெறுப்புகளை அறிய வேண்டும். அவர்கள் மனதில் உள்ள எண்ணங்களை புரிந்து கொள்ள வேண்டும்.அவர்களது மனங்களுக்கு மதிப்பளியுங்கள்.

அடுத்து சீதனப் பிரச்சினை என்றவுடன் வசதியான ஒரு மணமகன் வருகிறார் என்றதும் எம்மிடம் எதனையும் கேட்கவில்லையே என்று பெருமைப்படுவதை நிறுத்தி அவர்களின் குணத்தை முதலில் அறியுங்கள்.பணம் எப்போது வேண்டும் என்றாலும் சம்பாதிக்கலாம். ஆனால் அவர்கள் குணத்தை பார்க்க தவறிவிடாதீர்கள்.நன்றாக பல இடத்தில் விசாரியுங்கள்.ஏனெனில் வாழப் போவது உங்கள் பிள்ளைகள்.அவர்கள் எதிர்காலம் பற்றி சிந்தியுங்கள்.

அடுத்து வேலை பார்க்கும் பெண்கள் என்று குறிப்பிட்டுள்ளேன்.அவர்கள் தம் வீட்டில் இருந்து கதைப்பதற்கே நேரம் இல்லாது இருக்கிறது.இயந்திரம் போல் செயற்படுகின்ற வாழ்க்கை இன்று காணப்படுகின்றது.இங்கு ஒருவர் விருப்பு வெறுப்புகளை இன்னொருவர் அறிந்து கொள்ள நேரம் கிடைப்பதில்லை. நேரம் கிடைக்கும் போது மனம்விட்டு பேசுங்கள்.அப்போதுதான் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியும்.வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளை எவ்வளவு சுமுகமாகத் தீர்க்க முடியுமோ அவ்வளவு சுமுகமாக தீர்க்க முற்படுங்கள்.வீட்டில் ஏற்படும் பிரச்சினைகளை வீட்டிலேயே முடியுங்கள்.அதை வெளியில் தெரியப்படுத்துவதை குறையுங்கள்.

அடுத்து காதல் பிரச்சினை.பெற்றோர் தம் பிள்ளைகள் காதலிக்கிற விடயம் தெரிந்ததும் தம் கௌரவம் பார்க்கிறார்கள். ஏன் நாமே ஒருவரை தெரிவு செய்யத்தானே போகிறோம். அதுபோல் எம் பிள்ளைகளுக்கு மனம் ஒத்து அவர்கள் தெரிவு செய்வோரை ஏற்போம் என்கிற மனநிலை பெற்றோரிடம் இல்லை.தம் பிள்ளை தன் தகுதிக்கு ஏற்ற ஆளை தெரிவு செய்துள்ளது என்று அதனை ஏற்கமாட்டார்கள்.ஏனெனில் அவர்கள் கௌரவம் குறைந்துவிடும்.மனம் ஒத்த இருவரை பிரிக்கிறார்கள்.மனம் ஏற்காத ஒருவருடன் இணைக்கிறார்கள்.இங்கு தம் பிள்ளைகள் முதலில் காதலித்தவனின் குணத்துடன் தம்மை திருமணம் செய்வதை ஒப்பிடுவார்கள்.இதுவே அவர்களுக்கு வெறுப்பாக தோன்றலாம்.பிள்ளைகளின் மனங்களுக்கும் மதிப்பளியுங்கள்.

பிள்ளைகளின் மனம் ஒத்து வாழக்கூடிய வாழ்க்கையை எவ்வாறு ஏற்படுத்திக் கொடுக்கலாம் என்று சிந்தியுங்கள்.அவசர திருமணங்களை கட்டுப்படுத்துங்கள்.நன்றாக ஆராய்ந்து சரியான முறையில் தெரிவு செய்யுங்கள்.திருமணம் என்பது இருவர் இணைந்து வாழவே தவிர உடனே விட்டு பிரிவதற்கு அல்ல.அதனால் பின்பு ஏற்படப்போகும் விளைவுகளை சிந்தியுங்கள்.

விவாகரத்து எடுக்க முதல் அதனால் ஏற்படும் பின் விளைவுகளை சிந்தியுங்கள்.இனி எதிர்காலம் எப்படி அமையும் என்று யோசியுங்கள்.அதை விட்டு நாம் ஏதோ கெட்டித்தனமாக விவாகரத்து பெற விண்ணப்பித்து விட்டோம் என சிந்திக்காதீர்கள். விவாகரத்திற்கு விண்ணப்பித்தவுடன் நீதிமன்றில் விவாகரத்து கிடைப்பதில்லை.விவாகரத்து கடையில் வேண்டும் பொருளல்ல.

**நாம் போனவுடன் பெற்றுவர அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும்.**
**அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சரியான பதிலும் சரியான காரணமும் இருந்தால் தான் அதனை ஏற்பார்கள்.அப்படி ஏற்காது விட்டால் கூட இதன் பின்பு இவர்களால் சேர்ந்து வாழமுடியுமா?**


ஒரு நாளும் இல்லை.இதனால் எப்படியாவது விவாகரத்து பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் காரணம் தேடி அலைவார்கள்.

இனிவரும் காலங்களில் இவ்வாறான விவாகரத்துகளை எப்படித் தடுப்பது திருமணம்,விவாகரத்து என்ற நிலையை எப்படி மாற்றுவது என்று ஒவ்வொருவரும் சிந்திப்பதன் மூலமே விவாகரத்துகளின் எண்ணிக்கையை குறைக்கமுடியும்.

**மானியூரான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் ஒரு மகாபுருஷன்



தூக்கத்தில் குறட்டை விடுவதால் கணவனை விவாகரத்துச் செய்யும் மனைவி ருசியாகச் சமைக்கத் தெரியாததால் மனைவியை விவாகரத்து செய்யும் கணவன் ஆகியோருக்கு மத்தியில் இளம் பிள்ளை வாதத்தால் இரண்டு கால்களையும் இழந்த மனைவி மற்றும் நடைபழகும் பச்சிளம் குழந்தை ஆகியோரைத் தூக்கிச் சுமந்தபடி வலம் வருகிறார் ஒரு இந்திய வட மாநில இளைஞர்.

சத்திஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்தவர் நிஷாந்த். எட்டாம் வகுப்புவரை படித்துள்ள இவர் அங்கு கூலி வேலையைப் பார்த்து வந்தார். திருமணம் பற்றிய எண்ணமே இல்லாமல் இருந்த அவர் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நிஷா என்பவரைச் சந்தித்தார். பல எதிர்ப்புகளுக்கிடையே நிஷாவைத் திருமணம் செய்து கொண்டார். மகள் பிறந்தாள். குடும்பம் வளர்ந்தது. தனி மனிதனாக இருந்தபோது சமாளித்த நிஷாந்த் மனைவி,பிள்ளை என்று ஆனதால் கூலித் தொழிலில் வந்த வருமானத்தில் அவர்கள் கால் வயிறு உணவு சாப்பிடக்கூட முடியாமல் தவித்தனர். திடீரென அவர்கள் கிராமத்தில் பஞ்சம் ஏற்பட்டது. கூலி வேலை கூடக் கிடைக்காமல் தவித்தார் நிஷாந்த். அப்போது அவரது நண்பர்கள் தமிழகத்தின் பெருமைகளைப் பற்றிக் கூறினர்.

இதையடுத்து மனைவி, குடும்பத்துடன் கடந்த சில மாதங்களுக்கு முன் ரயில் ஏறிச் சென்னையில் இறங்கினார். கனவுகளுடன் சென்னை வந்த நிஷாந்திற்கு மொழி உள்ளிட்ட பல பிரச்சினைகளால் எதிர்பார்த்தபடி வேலை கிடைக்கவில்லை. வெறுப்பின் உச்சத்திற்குச் சென்ற நிஷாந்த் பசிக் கொடுமையால் இறுதியில் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். தர்மவான்கள் பிச்சையிடுவதில் கிடைக்கும் பணத்தில் மூவரும் பசியாறி மரத்தடி நிழலில் வசித்து வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து நிஷாந்த் கூறுகையில்;

உழைத்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையில்தான் சென்னைக்கு வந்தேன். ஆனால், பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டேன். என் மனைவி, குழந்தை மீது நான் அளவு கடந்த பாசம் வைத்துள்ளேன். பிச்சை எடுத்துக் கிடைக்கும் பணத்தில் அவர்களுக்கு முதலில் உணவு வாங்கிக் கொடுத்து விட்டுத் தான் பின் நான் சாப்பிடுவேன். கஷ்டத்திலும் மனைவி அளிக்கும் ஆறுதலான வார்த்தைகள் எனக்குத் தெம்பு கொடுக்கும். அவளுக்கு கால்கள் இல்லை. வாழ்நாள் முழுவதும் அவளை நான் சுமப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன். விரைவில் வேலை தேடிக் குடும்பத்தை நல்ல முறையில் காப்பாற்றுவேன் என நம்பிக்கையுடன் கூறினார் நிஷாந்த்.

# அமெரிக்கர்களின் நம்பிக்கை



திருமணத்தின் மீதான நம்பிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது.எனவே மகிழ்ச்சியாக வாழ்வதற்கு திருமணம் தேவையில்லை என்று அமெரிக்காவில் 10 இல் 4 சதவீத ஜோடிகள் கூறியுள்ளனர்.

இது குறித்து பீவ் ஆராய்ச்சி மையம் ஆய்வு செய்தது.அதன் விவரம் வருமாறு; அமெரிக்காவில் திருமணம் செய்யாமல் தம்பதியாக சேர்ந்து வாழ்வது இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது.அவ்வாறு சேர்ந்து வாழ்பவர்கள் ஒருவர் மீது மற்றொருவருக்கு நம்பிக்கை இருக்கும் வரையில் சேர்ந்து இருக்கின்றனர்.பின்னர் அவர்களுக்கு கருத்து வேறுபாடு முரண்பாடு ஏற்பட்டால் பிரிந்து விடுகின்றனர். திருமணம் செய்து வாழ்பவர்கள் மத்தியிலும் தற்போது விவாகரத்து எண்ணிக்கை அதிகரித்துள்ளது.இதனால் குடும்ப வாழ்க்கை முறையில் அதிக மாற்றம் ஏற்படுகிறது.

தற்போது அமெரிக்காவில் ஒரு குழந்தை விவாகரத்து ஆன பெற்றோர் அல்லது விவாகரத்து ஆனபின் மறுமணம் முடிக்காத தாயோ தந்தையுடனோ வாழ்கிறது.திருமணத்தின் மீதான நம்பிக்கை குறைந்துவருவதால் குடும்ப வாழ்க்கைக்கு திருமண்ம் என்பதுகட்டாயம் இல்லை என 39 சதவீதம் பேர் கருத்து தெரிவித்தனர்.இதேகருத்தை 1978 இல் 28 சதவீதம் பேர் தெரிவித்து இருந்தனர்.பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுக்கு குழந்தை இருந்தாலும் இல்லையென்றாலும் அதை ஏற்றுக்கொள்கின்றனர்.அமெரிக்காவில் தற்போது திருமணமாகாமல் 75 இலட்சம் ஜோடிகள் சேர்ந்து வாழ்கின்றனர்.

கடந்த ஆண்டைவிட இது 13 சதவீதம் அதிகம்.மேலும் திருமணம் ஆகாத இளைஞர்கள் 46 சதவீதம் பேர் திருமணம் அவசியம் என்றும் 64 சதவீதம் பேர் அவசியமில்லை என்றும் கருத்து தெரிவித்தனர்.அதிகமான இளைஞர்கள் குறிப்பாக 18-29வயதுடையோர் தங்களைவிட வயது முதிர்ந்த திருமணம் ஆகாதவர்கள் விவாகர்த்து ஆனவர்கள் அல்லது நண்பர்களை திருமணம் செய்து கொள்கின்றனர். திருமணத்துக்கு முன் இளைஞர்களிடம் இருக்கும் சுதந்திரம் அதன்பின் இருப்பதில்லை.இதுபோன்ற காரணங்களல் திருமணத்தின் மீது சிலருக்கு நம்பிக்கை இல்லாமல் போகிறது என்று தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நங்கையர் நாணமும் நகூர்ந்தார் நாணமும்!

**புலவர் கிருஷ்ணசாமி**

அனைவரும் தங்கள் பெருமைக்குக் களங்கம் ஏற்பட்டால் பிறரைக் காண நாணுவர்.ஆனால் பெண்களுக்கு நாணம் பிறக்கும் போதே தோன்றிய அணிகலனாக விளங்குகிறது.நாணம் பெண்ணின் அழகுக்கு அழகு தரும் பிறவிச் செல்வமாகும்.எவ்வெப்பொருள்களுக்கு எவை அழகு தருகின்றன என்ற கருத்தைப் பதினெண்கீழ்கணக்கு நூலான நான்மணிக்கடிகை சிறப்பாக விளக்குகிறது. 'நிலத்துக்கு அழகு தருவது நெல்லும் கரும்பும், குளத்துக்கு அழகு தருவது தாமரை, பெண்மையின் பெருமைக்கு அழகு தருவது நாணம்,அனைவருக்கும் அழகு தருவதுதான் செல்லும் உலகத்துக்குப் பயன்படும் நல்லறம்' என்ற கருத்தை

**'நிலத்திற் கணியென்ப நெல்**
**லும் கரும்பும்**
**குளத்திற் கணியென்ப**
**தாமரை-பெண்மை**
**நிலத்திற் கணியென்ப நாணம்**
**தனக்கணி**
**தான்செல் லுலகத் தறம்'**

ஒரு பெண் பாண்டிய மன்னனின் வீரத்தையும் அழகையும் கேள்விப்பட்டு அவன் மீது காதல் கொண்டாள்.பாண்டியன் அவள் வீடு உள்ள தெரு வழியாக தினமும் யானை மீது கம்பீரமாக உலா வருகிறான். அப்போது அப்பெண் தன் தோழியரிடம் அவன் செல்லும் கம்பீரத்தையும் அழகையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள்.தோழியர் எல்லோஅம் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர்.

தனியாகத் தன்வீட்டில் இருந்த இப்பெண் தான் பாண்டியன் மீது கொண்டுள்ள காதலை விளக்க வேண்டும்.அவனுடைய அழகான மார்பைத் தழுவவேண்டும் என்றெல்லாம் நினைக்கிறாள்.பாண்டியன் தினமும் அவள் வீட்டுத் தெரு வழியாக உலா வருகிறான். அப்போது அப்பெண்,தான் பாண்டிய மன்னன் மீதுகொண்டுள்ள காதலை வெளிப்படுத்த எண்ணுவதும் நாணம் தடுப்பதுமாகப் பல நாள்கள் செல்கின்றன. ஒருநாள் பாண்டிய மன்னன்மேல் உள்ள காதலை அவனுக்கு உணர்த்த முடியவில்லையே என்று வருந்திக் கூறுகிறாள்.பாண்டிய மன்னனைக் காணாதபோது அவனுடன் பேசுவதாக ஆயிரமும் சொல்வேன். அவனைக் கண்டபோது பகைவரை வென்று புறம் கண்டதும் ரத்தினக் கண்டிகைகள் அணியப்பட்டதுமான அழகான மார்பைத் தழுவ முடியவில்லையே.ஏனென்றால் இந்தப் பாழாய்ப்போன நாணம்,நான் பிறக்கும்போதே ஒரு நோய்போல் என்னுடன் பிறந்துவிட்டதே என்று கூறுகிறாள்.இதை இப்பெண்ணே கூறுவதாக முத்தொள்ளாயிரப் பாடல் கூறுகிறது.

**'மாணார்க் கடந்த மறவெம்**
**போர் மாறனைக்**
**காணாக்கால் ஆயிரமும் செ**
**ால்வேன் கண்டக்கால்**
**பூணாகம் தாவென்று புல்லப்**
**பெறுவேனோ**
**நாணோ டுடன்பிறந்த நான்'**
**(பா:1)**

இப்பாடலில் பாண்டியனுடன் பேசுவதற்கு முடியாமல் தடுக்கும் நாணத்தை ஒரு நோய்போல் கூறினாலும்,அந்த நாணம் அவள் பெண்மையின் பெருமையைக் காக்கும் கவசமாகவும் அவள் அழகுக்கு அழகு செய்யும் அணிகலனாகவும் விளங்குவதையே இப்பாடல் உணர்த்துகிறது.

பெண்களின் நாணத்தை நல்கூர்ந்தார் நாணத்தோடு ஒப்பிட்டு முத்தொள்ளாயிரத்தின் மற்றொரு பாடல் விளக்குகிறது.சேர மன்னன் தெருவில் யானைமேல் உலா வருகிறான். அப்போது ஒரு பெண் அவனுடைய அழகையும் கம்பீரத்தையும் காணவேண்டும் என்ற ஆசையால் கதவைத் திறக்கிறாள்.நாணத்தால் கதவை மூடுகிறாள்.அவள் ஆசையால் கதவைத் திறக்கவும் நாணத்தால் மூடுவதுமாக உள்ளாள்.

பெண்ணின் இச்செயல் எதுபோன்று உள்ளதென்றால் நேற்றுவரை செல்வராக் இருந்தவர்கள்,இன்று செல்வத்தை இழந்து வறியவர்களாகிவிட்டதால் வறுமையின் கொடுமையால் தம் முன்னாள் நண்பர்களாகிய இந்நாள் செல்வர்களின் வீடு நோக்கி உதவிகேட்டுச் செல்கிறார்கள்.நேற்றுவரை அந்தச் செல்வர்களுக்குச் சமமாக செல்வத்துடன் வாழ்ந்த நாம் இன்று உதவி கேட்பதற்காக அவர்களின் வீட்டுக்குச் செல்வதா என்று நாணம் தடுப்பதால் வாசல் வரை வந்தவர்கள் வீட்டினுள் செல்லாமல் திரும்புகிறார்கள்.மீண்டும் வறுமையின் கொடுமை அவர்கள் வீட்டுக்குள் செல்லும்படி துரத்த நாணம் உள்ளே போகவிடாமல் தடுக்க அவர்கள் நாணத்துக்கும் வறுமைக்கும் நடுவே சிக்கித் தவிப்பதைப் போல் உள்ளதாம். அதுபோல் என் உள்ளம் காதலுக்கும் நாணத்துக்கும் நடுவில் சிக்கித் தவிக்கிறது என்று கூறுகிறாள் அப்பெண்:

**'ஆய்மணிப் பைம்பூண்**
**அலங்கலங் கோதையைக்**
**காணிய சென்றேன் கதவ**
**டைத்தேன்-நாணிப்**
**பெருஞ்செல்வர் இல்லத்து**
**நல்கூர்ந்தார் போல**
**வரும் செல்லும் பேரும்**
**என் நெஞ்சு'**

நாணத்தோடு உடன்பிறந்தவள் என்னும் பாடலும் நல்கூர்ந்தாரின் நாணத்தோடு பெண்களின் இயல்பான நாணத்தை ஒப்பிட்டுக் கூறும் பாடலுமான இவ்விரண்டு முத்தொள்ளாயிரப் பாடல்களும் நாணம் பெண்கள் தாம் விரும்பிய காதலனிடம் தன் உள்ளத்தில் உள்ள காதலைத் தெரிவிக்க முடியாமலும் தன் காதலனை வெளிப்படையாகக் காண முடியாமலும் தடுப்பதனால் பெண்களுக்கு நாணம் தீமை செய்வதுபோல் தோன்றினாலும் இயற்கை அன்னை பெண்களுக்குச் சீதனமாகத் தந்திருக்கும் அழியாத அணிகலன் என்னும் பண்பு என்பதை முத்தொள்ளாயிரப் பாடல்கள் இரண்டும் இலக்கிய நயத்துடன் விளங்குகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிகார முட்கள் வலப்பக்கமாக நகருவது ஏன்?

பண்டைய கால கடிகாரங்களில் முட்கள் கிடையாது. கடிகாரம் எழுப்பும் ஒலியை வைத்தே மக்கள் நேரத்தைக் கணக்கிட்டனர். பின்னர் எழுத்துக்களைக் கொண்டு கணக்கிடும் முறை வந்ததும், முட்கள் பயன்படுத்தப் பட்டன. ஆரம்பத்தில் ஒரே ஒரு முள் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. பின்னர் காலப்போக்கில் மணி, நிமிடம், நொடி என ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான முட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கடிகாரமானது, வட அரைக் கோளத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. அதாவது, பூமியின் நடுப்பகுதியில் செல்லும் பூமத்திய ரேகையின் மேற்பகுதியில் வாழ்ந்த மக்களால் கண்டு பிடிக்கப்பட்டது. அவர்கள், சூரியக்கடிகாரத்தின் நிழல் செல்லும் பாதையைப் பின்பற்றி, முட்களின் திசையையும் வலப்பக்கமாக அமைத்தனர்.






# குறுக்கெழுத்துப்போட்டி - 61

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ✓ | 5 |
| 6 | 7 | 8 | 9 | ✓ | 10 |
| 11 | ✓ | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | ✓ | 18 | 19 | 20 |
| ✓ | 21 | 22 | ✓ | 23 | ✓ |
| 24 | 25 | 26 | ✓ | 27 | 28 |

**இடமிருந்து வலம்**

1. முதல்வர் என்றும் சொல்லலாம்
6. மீளமுடியாதது (குழம்பியுள்ளது)
12. வயலும் வயல் சார்ந்த இடமும் (குழம்பியுள்ளது)
16. ஹிரித்திக் ரோஷின் நாயகனாக நடித்த பிரபல ஹிந்திப் படம் (திரும்பியுள்ளது)
18. கயிறு என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
21. துப்பாக்கி குண்டை இப்படியும் சொல்வர்
24. இலங்கையை சேர்ந்த தொழிலதிபரை மணந்த தென்னிந்திய நடிகை
27. வெயில் காலத்துக்கு சிறந்தது

**மேலிருந்து கீழ்**

1. பாம்பு
2. சந்திரன் என்றும் சொல்லலாம் (தலைகீழ்)
3. இது என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பர்
4. இது ஒரு கலை (குழம்பியுள்ளது)
5. பாம்பின் எதிரி (குழம்பியுள்ளது)
14. இது தலை காக்கும் என்பர் (குழம்பியுள்ளது)
17. தொலைவு என்றும் சொல்லலாம்
22. பெண் (தலைகீழ்)

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

## குறுக்கெழுத்துப்போட்டி - 59 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. ஒபாமா | 1. ஒற்றன் |
| 4. மடு | 3. மாகாணம் |
| 7. காந்தி | 4. மதில் |
| 11. தணல் | 8. வதந்தி |
| 14. வன்மம் | 15. மண்டு |
| 20. திமிர் | 18. விசர் |
| 23. கண்டி | 21. சாமி |
| 26. சாவி | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**


**கேதீஸ்வரநாதன் சுதானந்,**
125, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## பாராட்டுப் பெறுவோர்

01. செ.ரொபட், இல. 114, 1/1, நியூநாம் குயார், கொழும்பு-13.
02. ஏ.சரண்ராஜ், இல. 152, பாஸ்கர் ஸ்ருடியோ, பெரியகடை, மன்னார்.
03. திருமதி ஷ.உருத்திராதேவி, இல. 23, டச் வீதி, சாவகச்சேரி.
04. எஸ்.றஸ்லினா, புவக்கொட்டுவ, ஹேகோட, பதுளை.
05. வை.டொரிங்டன் ஸ்பெக், இல. 59/1, லேடி மெனிங் டிறைவ், மட்டக்களப்பு.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...


# பறக்கும்போதே உறங்கும் பறவைகள்



பறக்கும்போதே உறங்குகின்ற பறவைகள் இருக்கின்றன. அவற்றின் பெயர் ஆல்பட்ரோஸ். இவை கடல் பறவைகள். பூமியின் தெற்குப் பகுதியில் உள்ள கடல் பகுதிகளில்தான் ஆல்பட்ரோஸ்கள் வசிக்கின்றன. முட்டையை விட்டு வெளிவந்து பறக்கத் தொடங்கிவிட்டால் பிறகு இந்தக் கடற்பறவைகள் தரையில் இறங்குவதில்லை. கீழே இறங்காமல் ஏறத்தாழ ஐந்து வருடங்கள் தொடர்ந்து பறப்பதற்கு இவற்றால் முடியும். பறப்பதற்கிடையில்தான் இவை உண்கின்றன, உறங்குகின்றன.

இந்தப் பறவைகள் பெரிய இறக்கைகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு பகுதி இறக்கை ஏறத்தாழ மூன்று மீற்றர் நீளமுடையதாயிருக்கும். இந்த இறக்கைகளை இருபுறமும் விரித்தால் மணிக்கணக்காகவோ அல்லது நாட்கணக்காகவோ இவற்றால் ஆகாயத்தில் அப்படியே பறக்க முடியும். கடலில் உள்ள மீன்களும் சிறிய பிராணிகளும்தான் இவற்றின் உணவு. நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 640 கிலோ மீற்றர் தூரம் இவை பறப்பதுண்டு. மிக விரைவாகப் பறக்கும் திறமை உள்ள 'ஸ்விப்ட்' எனும் கடற்பறவையும் பறக்கும்போதுதான் உறங்கும்.

# நாடோடி நட்சத்திரம்



விண்வெளியில் சூரியன், நிலா, வெள்ளிக் கிரகத்துக்கு அடுத்த படியாக பிரகாசமாகத் தெரிவது வியாழன். இது பிரகாசத்துடன் இருப்பதைப் பார்த்த பழங்காலத்தினர் வியாழனை நட்சத்திரம் என்றே நினைத்தனர். இது சூரியனைச் சுற்றுவதற்காக வேகமாகப் பயணம் செய்வதைப் பார்த்து இதற்கு 'நாடோடி நட்சத்திரம்' என்று பெயர் சூட்டினர். பின்னர்தான் இது கிரகம் எனத் தெரிய வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் இலங்கையர்களாக இருக்க வேண்டுமாயின்...

மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தினால் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த தமிழ் மக்கள்,தற்போது யுத்தமற்ற சூழலிலும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். இதில் தென்னிலங்கையிலிருந்து வருவோரால் குடாநாட்டு மக்கள் எதிர்கொள்ளும் இடர்களோ மிக அதிகம்.

அண்மைக் காலங்களாகக் குடாநாட்டை நோக்கிப் படையெடுக்கின்ற தென்னிலங்கை மக்கள் தாம் மேற்கொள்கின்ற 'அநாகரிக'ச் செயற்பாடுகளினால் தமிழ் மக்கள் நெஞ்சங்களில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவமாய் வாழவேண்டும் எனும் எண்ணமற்று 'இலங்கை கௌதம புத்தரால் பௌத்தர்களுக்காக ஆசீர்வதிக்கப்பட்ட தேசம்' எனும் எண்ணத்தில் அவர்கள் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

போரினால் தமிழர் தேசம் கண்டுள்ள அழிவுகள் கொஞ்சமல்ல உயிர்கள், உடைமைகள், கலை, கலாசாரங்கள், பொருளாதாரம், சமூகச் சீர்மியம் என அனைத்தையும் இழந்தார்கள்;வாழ்வின் வெறுமைக்குள் தள்ளப்பட்டார்கள். வறுமையால் காவு கொள்ளப்பட்டார்கள். நிம்மதியிழந்து வாழ்வின் கனவிழந்து நடைபிணங்களாய் நிற்கின்ற இம்மக்களிடம் இன்னமும் எஞ்சியுள்ள ஒரே சொத்து நம்பிக்கை மட்டும் தான்.



வேரிழந்த விருட்சங்களாய் மீண்டும் வாழ்வோம் எனும் வேட்கையுடன் இவர்கள் எழுந்து நிற்கிறார்கள்.ஆனால்,அவர்தம் வாழ்வில் துளிர்விடும் அரும்புகளை சிலர் அழித்திட முனைகின்றார்கள்.சட்டத்தைக் கையில் ஏந்திடும் அதிகார வர்க்கத்தால் துன்புறுத்தப்படுகிறார்கள்.

நீறுபூத்த நெருப்பாக நெஞ்சத்துள் கனல் பறக்கும் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்ற இம் மக்களின் நம்பிக்கையில் மண்தூவும் செயற்பாடுகளாக அண்மையில் நடைபெற்ற அராஜகங்களைக் குறிப்பிடலாம்.இவற்றுள் நூலகத்துள் புகுந்து மேற்கொண்ட அடாவடித்தனங்கள்,நாவற்குழியில் அத்துமீறிச் சென்று குடியேறியமை மற்றும் 'பணம் கறக்கும்' செயற்பாடு என்பன தமிழ் மக்கள் மத்தியில் கடும் உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது இம்மக்கள் வேதனை மேல் வேதனையை அனுபவித்து வருகிறார்கள்.ஆகாயத்தை அலங்கரிக்கும் நட்சத்திரக் கூட்டமாய் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கின்ற தென்னிலங்கை வாசிகள் தற்போது அங்கே புதுநாடகம் ஒன்றை அறங்கேற்றி வருகின்றனர்.அது தான் மந்திர தந்திர வார்த்தைகள் கூறிப் பணம்கறக்கும் செயற்பாடு.

வேரோடு சாய்க்கப்பட்ட தமிழர் வாழ்க்கையின் விழுதுகளையும் அழித்து இனங்காண முயலும் இவர்கள் புத்தரின் புதல்வர்கள் தானா? காணாமல் போனோரை மீட்டுத் தருவதாகக் கூறிப் பணங்கறக்கும் மோசடிக்கும்பல் ஒன்று ஒருபக்கம் செயற்படுகிறது. இவர்களின் நிஜமுகங்களை அடையாளம் காண முடியாத மக்களும் தம் உறவுகளைக் காண வேண்டுமெனும் வேட்கையில் பணத்தைக் கொடுக்கிறார்கள்.இது குறித்து பொலிஸாரும் படையினரும் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.ஆனால், சூத்திரதாரிகளைத் தண்டித்ததாகத் தெரியவில்லை.

இது இவ்வாறிருக்க புத்தரின் புதல்வர்கள்,காவியுடையின் சொந்தக்காரர்கள் 'அறச் செயல்கள்' மேற்கொள்வதற்கு எனக் கூறிப் பணங்கறக்கும் செயலில் மறுபக்கம் இறங்கியுள்ளனர்.இதில் பெண்களும் அடங்குகின்றனர்.

அண்மையில் இந்தச் செந்தணல் செம்மல் குழுவொன்று யாழ்.கன்னாதிட்டி வீதியில் நின்று அநுராதபுரம்- அநாதைச் சிறுவர் இல்லத்திற்குப் பணம் சேகரிக்கிறோம். தங்களால் இயன்ற உதவியை நல்குங்கள் எனக் கூறி வழிப்போக்கரிடமிருந்து பணம் பறித்துள்ளனர்.இது மட்டுமன்றி வீடு வீடாகச் சென்று வீட்டிலுள்ளோரை குறிப்பாகப் பெண்களை அச்சுறுத்தி ஆயிரக்கணக்கில் பணம் கறப்பதாகவும் மக்கள் முறையிடுகின்றனர்.

போர்க்காலங்களில் சீருடைச் செம்மல்களின் சுற்றிவளைப்புக் கெடுபிடிகளுக்குப் பயந்து மக்கள் வீடுகளைப் பூட்டி வைத்திருந்ததைப் போன்று தற்போதுள்ள சமாதானக் காலத்தில் இந்தச் செந்தணல் செம்மல்களின் செயற்பாடுகளால் வீடுகளைப் பூட்டி வைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவர்களின் செயலினால் பாதிக்கப்பட்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;

அநாதைச் சிறுவர் இல்லத்திற்கு நிதி சேர்க்கிறோம் என்று கூறி என்னிடமிருந்து ஆயிரம் ரூபாவைப் பறித்துள்ளனர்.அவர்கள் மரியாதையாக நடந்து கொள்வதாகவும் தெரியவில்லை.வீடுகளில் தனியே இருக்கின்ற பெண்கள் இவர்களால் பெரிதும் பாதிப்படைகின்றனர்.இது குறித்துப் படையினரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை என்றார்.

தென்னிலங்கை வாசிகளின் செயற்பாடுகள் குறித்து பெண்ணொருவர் கூறுகையில்;

இவர்களின் அதிகரித்த அநர்கரிகச் செயல்களைக் கண்டு பொறுத்திருக்கும் மக்கள் ஒருநாள் பூகம்பமாய் எழுந்தாலும் எழக்கூடும்.தட்டிக் கேட்க ஆளில்லை என்ற துணிவுடன் அவர்கள் செய்யும் கூத்துகள் கொஞ்சமல்ல. எங்களுக்கென்றிருக்கின்ற பண்பாட்டு விழுமியங்களும் தேய்வடையக் கூடிய வழிவகைகளை அவர்கள் செய்கின்றனர் எல்லாம் எதுவரை என்று பார்ப்போம்.என ஆவேசம் பொங்கிவழியக் கூறினார்.

யுத்தத்தால் அனைத்தையும் இழந்துள்ள தமிழ்ச் சமூகம் இனிமேலும் இழப்பதற்கு எதுவுமில்லை. நொந்து போயுள்ள அவர்களின் மனங்களைப் புண்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அவர்களைத் 'தமிழினம்' என்று மட்டும் பார்க்காது-பாகுபடுத்தாது 'இலங்கையர்' எனும் பாங்குடன் செயற்பட வேண்டும்.

'ஆயிரம் யுத்தங்களை விட ஒரு சமாதானம் மேலானது' என்பார்கள்.அந்த வகையில் சமாதான பூமியாகத் தற்போது மாறியுள்ள இலங்கையில் இனியொரு யுத்தம் வேண்டாம்.மக்களும் அதனை விரும்பவில்லை.எனவே,இம் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் 'சூத்திரதாரிகள்' தாமாக திருந்தாவிடின் இனங்கண்டு தண்டிக்கப்படல் வேண்டும்.

இதுவே, நாம் இலங்கையர் எனும் ஜனாதிபதியின் மகுடவாசகத்திற்கு ஒரே வழி எனவே,சிறுபான்மை-பெரும்பான்மை என்பதை தவிர்த்து அனைவரும் நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்தல் வேண்டும்.

**எஸ்.ரூபனா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரம் போட்ட கட்டளை; ஆமாம் போட்ட அமலா



படத்துல மட்டுமல்ல, நிஜத்திலேயும் ஒரு நடிகைக்கு எல்லாமுமாக இருப்பது ஹீரோக்களுக்குப் பிடித்த விடயம். அதிலும் விக்ரம் மாதிரி ஹீரோக்களுக்கு இந்த விளையாட்டு ரொம்பவே பிடிக்கும். உதாரணமில்லாமல் ஒரு விடயத்தைப் பேச நாம் என்ன விரோதியா விக்ரமுக்கு?

சிந்துசமவெளி,மைனா போன்ற படங்களில் நடித்த அமலா தற்போது விக்ரம் படத்தில் நடிக்க கமிட் ஆகியிருக்கிறார். இன்னும் பெயர் வைக்கப்படாத அந்தப் புதிய படத்தில் அமலாதான் இவருக்கு ஜோடி. சீன் காட்ற சினிமாவுலேயே சீன் போடுற வேலை ஆரம்பமாகிவிட்டதாம் இப்போது! என்னுடைய அடுத்த படத்திலேயும் நீதான் எனக்கு ஜோடி என்ற முதல் அஸ்திரத்தை எறிந்த விக்ரம், அப்படியே சொன்ன இன்னொரு அட்வைஸ் 'மேனஜரை மாத்திடு' என்பதுதான்.

முதல் படத்திலிருந்தே இவருக்குப் பட வாய்ப்புகள் வாங்கிக் கொடுத்த இன்னொரு மேனேஜருக்கு இந்த விடயம் தெரியுமோ, தெரியாதோ? சட்டென்று சரி சொல்லிவிட்டார் அமலாவும். தன் மேனேஜரை அழைத்து 'இனிமே இவங்களுக்குத் தேவையான பப்ளிசிட்டி மற்றும் பட வாய்ப்புகள் எல்லாமே உங்க பொறுப்பு' என்று கூறிவிட்டாராம் விக்ரம்.

பொழப்புக்கு பூ விக்கப் போனாராம் ஒருவர் மொழம் போட வந்தாரம் இன்னொருவர்!

## தினமும் ஐந்து லட்...

கோயம்புத்தூர்ல குண்டு வச்சுட்டு கோடம்பாக்கத்துல செளக்யமா? என்று கேட்கிறாரு விவேக். உத்தமபுத்திரன் படத்தில இவர் பேசிய டயலொக் மேற்படி ஏரியாவை அந்தளவு சிந்தலயாக்கியதை அவ்வளவு சீக்கிரம் மறந்திருக்க முடியாது. தமிழ் சினிமாவின் வேகத்தையும் வெற்றியையும் தீர்மானிக்கிற விடயத்தில் நகைச்சுவை நடிகர்களின் பங்கு நாளுக்கு நாள் டெவலப் ஆகிக் கொண்டேயிருக்கிறது.

வடிவேலுவின் நகாம், சந்தானத்தின் மந்திரப்புன்னகை,கஞ்சா கறுப்பின் மகிழ்ச்சி என்று போகிற போக்கில் விளம்பரப்படுத்தினாலும் ஆச்சரியமில்லை. இந்தத் திடீர் போட்டியின் பெயரை சம்பாதிப்பதோடு, பாக்கெட்டையும் நிரப்பிக்கொள்ளத்

# த்ரி இடியட்ஸ் ரீமேக் மகேஷ் பாபு வருத்தம்

Saturday சினிமா




ஒரு வழியாக 'த்ரி இடியட்ஸ்' டீம் தயாராகிவிட்டது. ஷங்கரின் இயக்கத்தில் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் தயாராகப் போகும் இப்படத்தின் படப்பிடிப்பு வரும் டிசம்பர் 5 ஆம் திகதி டேராடூனில் தொடங்குகிறது. அங்குள்ள என்ஜினியரிங் கல்லூரியொன்றில் ஷூட்டிங் வைத்திருக்கிறார் ஷங்கர்.

மொத்தம் பதினொரு நாட்கள் நடக்கப்போகும் இந்த ஷூட்டிங்கில் படம் தொடர்பான அத்தனை நட்சத்திரங்களும் இருக்கப்போகிறார்களாம்.

விஜய்,ஜீவா,ஸ்ரீகாந்த் இவர்களுடன் இலியானாவும் நடிக்கிறார். தெலுங்கு பதிப்பில் விஜய்க்கு பதிலாக மகேஷ்பாபு நடிக்கிறார். இவர்கள் அத்தனை பேருமே டிசம்பர் 5 இல் டேராடூனில் இருப்பார்களாம். [அப்படின்னா க்ளைமாக்ஸ் எடுப்பாங்களோ?]

த்ரி ராஸ்கல்ஸ் என்று தற்காலிகமாக பெயர் வைத்திருக்கிறார் ஷங்கர். [அப்புறம் வரி விலக்குக்காக ஒருமுறை மாத்துவாங்களாக்கும்...] எல்லாம் சரி. மகேஷ்பாபுவுக்கு மட்டும் சின்ன வருத்தமாம். விஜய் தவிர இந்தப் படத்தில் நடிக்கவிருக்கும் இரண்டு நட்சத்திரங்களும் தெலுங்கில் அவ்வளவு பரிச்சயமில்லை. அவர்களுக்குப் பதிலாக தெலுங்கில் இருந்தே இரண்டு பெரிய ஸ்டார்களை புக் பண்ணியிருக்கலாமே என்பதுதான் அந்த வருத்தம்.

தமிழ் தனி, தெலுங்கு தனி என்று படப்பிடிப்பு நடப்பதால் இவர் சொன்ன யோசனை நியாயமானதுதான் என்கிறார்கள் தெலுங்கு ஏரியாவில்.






மீனாக்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...லட்சம் கொடுங்க... சலம்புகிறார் சந்தானம்!



தயாராகிவிட்டார்கள் இந்தக் காமெடியர்கள்.

ஒரு நாளைக்கு ஐந்து இலட்சம் சம்பளம் கேட்க ஆரம்பித்திருக்கிறாராம் சந்தானம். முப்பது நாளும் பிஸியாக இருப்பதால் பெரிய ஹீரோக்கள் கூட அம்மாடி போவ்... என்று வயிறெரிச்சல் படுகிற சம்பளம் அது. கறுப்பு மட்டும் சும்மாயிருப்பாரா? மூன்று விரலை நீட்டுகிறாராம். [தினக்கூலியாகத்தான்] வடிவேலு ஏற்கனவே பத்து விரலையும் நீட்டிக்கொண்டிருக்கிறார். என்றாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் இந்த மூவருக்கும். ஹ்ம்ம்ம் இப்பல்லாம் சித்திரத்தை வச்சுத்தான் சுவரே ரெடியாகுது.

# 120 ஸ்டில் கமராவுடன் 18 வயசு படப்பிடிப்பு



18 வயசு படத்துக்காக 120 ஸ்டில் கமராவைப் பயன்படுத்தி காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. நிக் ஆர்ட்ஸ் எஸ்.எஸ்.சக்கரவர்த்தி தயாரிக்கும் படம் '18 வயசு'. ஜானி, காயத்ரி ஜோடியாக நடிக்கிறார்கள். 'ரேனிகுண்டா' படத்துக்குப் பிறகு பன்னீர்செல்லம் இயக்குகிறார். படம் பற்றி அவர் கூறியதாவது;

18 வயதில் மனநோயாளியாகும் இளைஞனைப் பற்றிய கதைதான் இது. இதேமாதிரி பல படங்கள் வெளிவந்திருந்தாலும் இந்தப் படம் புதிய பரிமாணத்தில் இருக்கும். இதில் ப்ரியா என்கிற பெண்ணை காமெடி கரக்டரில் அறிமுகப்படுத்துகிறோம். பத்திரிகையாளர் கிருஷ்ணா டாவின்சி,முக்கியமான வேடத்தில் நடிக்கிறார். இந்தப் படத்துக்காக 120 ஸ்டில் கமராவைப் பயன்படுத்தி பல காட்சிகளை எடுத்துள்ளோம். இதை டைம் ஸ்லைஸ் ஷொட்ஸ் என்பார்கள். பாய்ஸ், அந்நியன் படங்களில் ஒன்றிரண்டு ஷொட்களுக்கு மட்டும் இந்த முறையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். நாங்கள் 8 முக்கியமான காட்சிகளுக்கு இந்த ஷொட்டைப் பயன்படுத்தியிருக்கிறோம். ஷக்தி இந்த டெக்னிக்கை கொண்டு ஒளிப்பதிவு செய்திருக்கிறார். இது ரசிகர்களுக்கு புதிய அனுபவத்தைக் கொடுக்கும்.

ஜானிக்கு இந்தப் படத்தில் சவாலான கரக்டர்.சிறப்பாக நடித்திருக்கிறார். பட ரிலீஸுக்கு முன்பே ஹீரோயின் காயத்திரிக்கும் இசை அமைப்பாளர் தினேஷ் சார்லஸ் பாஸ்கோவுக்கும் பல வாய்ப்புகள் வந்துள்ளன. அதிகமான பொருட் செலவில் சக்கரவர்த்தி தயாரிக்கிறார். இந்தப் படம்,டிரெண்ட் செட்டாக அமையும் என்பது என் நம்பிக்கை. இவ்வாறு பன்னீர்செல்வம் கூறினார்.

## இளைய தளபதியின் 'டிசம்பர்' சென்டிமென்ட்





பொதுவாக இளைய தளபதியின் படங்கள் மட்டும் சீக்கிரமாகத் திரைக்கு வந்துவிடும். ஆனால், விஜய் நடித்த காவலன் படம் மட்டும் ரிலீஸ் தள்ளிப் போகிறது. தீபாவளிக்கு காவலன் ரிலீஸ் பண்ண வேண்டும் என்ற திட்டத்துடன் தொடங்கிய படக்குழு. போஸ்ட்புரொடக்சன் வேலைகள் முடிந்த பிறகும் டிசம்பரில் படத்தை வெளியிட முடிவு செய்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று விசாரித்தால் விஜய்யின் கடந்த ஆறு படங்கள் சரியாகப் போகவில்லை என விநியோகஸ்தர்கள் கூற அதனால் இந்தப் படம் எப்படியும் வெற்றிபெற்றே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்தில் விஜய் இருப்பதாகத் தகவல் தெரிவிக்கின்றன. சித்திக் இயக்கத்தில் விஜய் நடித்த ப்ரெண்ட்ஸ் படம் டிசம்பரில் வெளியாகி மிகப்பெரிய வெற்றியை பெற்றது. அந்தப் படம் வெளியானது டிசம்பர் மாதம். அதனால்தான் சென்டிமெண்டாக டிசம்பருக்கு பட ரிலீஸ் பண்ண வேண்டும் என்ற விஜய் சென்டிமெண்டாக இருப்பதாக கொலிவூட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கதாநாயகிகளுடன் நடிக்க பாவனா மறுப்பா?



மலையாளம்,கன்னடப் படங்களில் நடித்து வருகிறார் பாவனா. அவர் கூறியது; கிருஷ்ணவம்சி இயக்கத்தில் தெலுங்கில் நடித்த மகாத்மா தமிழில் புதிய தளபதியாக வரவுள்ளது. இப்படம் எனக்கு நல்ல பேர் தந்தது. வக்கீல் வேடத்தில் நடித்திருக்கிறேன். காதலியாக டூயட் பாடிக் கொண்டிருந்த எனக்கு மாறுபட்ட பாத்திரம். பல ஹீரோயின்கள் சேர்ந்து நடிக்கும் படத்தில் நடிக்க மறுத்ததாகச் சொல்கிறார்கள். மல்டி ஸ்டார்ஸ் படங்கள் இப்போது பொலிவூட்டில் மட்டுமல்ல, தென்னிந்திய சினிமாவிலும் சாத்தியப்பட்டு வருகிறது. அசல் படத்தில் சமீராவுடன் நடித்தேன். புதிய தளபதியில் சார்மி,நவ்னீத்,கவுர்,மேனாவுடன் நடித்திருக்கிறேன். அதனால் பல ஹீரோயின்களுடன் நடிக்க மறுக்கவில்லை. மலையாளத்தில் மரிக்குன்டோரு குஞ்ஞாடு படத்தில் திலீப் ஜோடியாகவும் குடும்பஸ்ரீ டிராவல்ஸ் படத்தில் ஜெயராம் ஜோடியாகவும் நடிக்கிறேன்.


## தமிழ் படத்திலிருந்து விலகிய அனுஷ்கா



தமிழ், தெலுங்கில் 'காஞ்சனா' படத்தை இயக்கத் திட்டமிட்ட லாரன்ஸ், இப்போது தமிழில் மட்டுமே அப்படத்தை இயக்கி ஹீரோவாக நடிக்கிறார். தமன் இசை அமைக்கிறார். காஞ்சனா படத்தில் ஹீரோயினாக அனுஷ்கா நடிப்பார் என அறிவிக்கப்பட்டது. ஆனால், காஞ்சனா படத்திலிருந்து விலகிய அனுஷ்கா, லோரன்ஸ் இயக்கும் தெலுங்கு படத்தில் மட்டும் ஹீரோயினாக நடிக்கவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோயிஸ்டுகளிடம் 'கவர்ச்சிக் குண்டு'



நேபாள நாட்டின் கவர்ச்சி நடிகை ரேகா தாபா, மாவோயிஸ்டுகளுடன் கை கோர்த்துள்ளார். இதைத் தனது பேஸ்புக் தளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

20 வயதுகளில் இருக்கும் ரேகா தாபா,கிழக்கு நேபாளத்தைச் சேர்ந்தவர். மிக மிக கவர்ச்சிகரமான உடைகளுடன் படங்களில் தோன்றுபவர். பல்வேறு சூடான சர்ச்சைகளையும் கிளப்பி வருபவர்.தற்போது மாவோயிஸ்டுகளின் பிரசார பீரங்கியாக அவர் மாறியுள்ளார். முன்பு முழு முதுகும் தெரிய உடை அணிந்து வந்ததால் இந்து அமைப்பு ஒன்றுடன் இவருக்கு மோதல் ஏற்பட்டது. அதேபோல பொலிவூட் நடிகர் சக்தி கபூருடனும் மோதிய அனுபவம் இவருக்கு உண்டு. இப்போது மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளார். அவர்களுடன் கரம் கோர்த்துள்ளார்.

கடந்த ஆண்டுதான் இவர் நேபாள மாவோயிஸ்ட் கட்சியில்உறுப்பினராக இணைந்தார். இதையடுத்து மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவாகத் தீவிரமாகச் செயல்படத் தொடங்கினார். இவர் மாவோயிஸ்டுகளுக்கு ஆதரவாகப் பேசும் கூட்டங்களுக்குப் பெரும் கூட்டம் வரத் தொடங்கியது.கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடந்த பாராளுமன்றத்தை முற்றுகையிடும் போராட்டத்திலும் கலந்து கொண்டார். அப்போது மாவோயிஸ்ட் தலைவரும் முன்னாள் பிரதமருமான புஷ்ப கமல் பிரசந்தாவுடன் இணைந்து இவர் நடனம் ஆடி அனைவரையும் கவர்ந்தார். இந்தக் காட்சியை ஊடகங்களும் பிரசந்தாவின் மனைவி சீதா தஹாலும் விழிகள் விரியப் பார்த்தனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் மாவோயிஸ்ட் ஆதரவு இயக்குநர் ஒருவரின் படத்தில் நாயகியாக நடிக்கவும் ரேகா தாபா ஒப்பந்தமானார். ஜெய்லாலா என்று பெயரிடப்பட்டுள்ள அப்படத்தை இயக்குநர் லமிசானே இயக்கவுள்ளார். கவர்ச்சிகரமான படங்களில் நடித்து வந்த ரேகா தற்போது மாவோயிஸ்ட் ஆதரவுப் படங்களில் நடிக்கபடு தீவிரமாகவுள்ளாராம். ஜெய்லால படப்பிடிப்புத் தொடாங்கியபோது அங்கு வந்த மாவோயிஸ்ட் மக்கள் விடுதலைப் படையின் துணைத் தலைவரான நந்த் கிஷோர் புன்பசங் உண்மையான துப்பாக்கியை எப்படிப் பிடித்துச் சுட வேண்டும் என்பது குறித்து ரேகாவுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

ரேகாவின் தீவிர மாவோயிஸ்ட் ஆதரவைப் பார்த்து வியந்துபோன மாவோயிஸ்ட் அமைப்பின் இளைஞர் பிரிவுத் தலைவரான சந்திர பகதூர் தாபா சாகர்,ரேகாவைத் தனது தங்கையாகத் தத்தெடுத்துக் கொண்டார். சகோதரர்கள் தினத்தன்று இந்தத் தத்தெடுப்பு நடந்தது. அப்போது சாகர் தந்த பரிசுப் பணத்தையும் பாசத்தோடு பெற்றுக்கொண்டார் ரேகா.

ரேகாவின் வருகையால் மாவோயிஸ்ட் கட்சியினரும் குஷியடைந்துள்ளனர். ரேகாவின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு,மாவோயிஸ்ட் கட்சியின் 2 ஆம் நிலைத் தலைவரான பாபுராம் பட்டாராய்,ரேகாவுடன்,காத்மண்டுவில் உள்ள ஒரு தியேட்டருக்குப் படம் பார்க்க வந்ததால் அனைவரும் ஆச்சரியமடைந்தனர். அப்படம் ரேகா நடித்த யார் எனது இதயத்தைக் கவர்ந்தது என்று பொருள்படும் கஸ்லே சோரயோ மேரா மேன் என்ற தலைப்பைக் கொண்டதாகும். மாவோயிஸ்டுகளை மட்டுமல்லாமல் நேபாள மக்களிடையேயும் ரேகாவின் இந்தத் தீவிர மாவோயிஸ்ட் ஆதரவுப்போக்கு பெரும் வியப்பலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# ஆசியர்களுக்கு தெரியாத விடயம்

ஆசியர்களுக்கு செக்ஸ் குறித்து அறிவு போதாது என்று கூறி நியூசிலாந்து வர்த்தக கல்லூரி ஒன்று செக்ஸ் கல்வியை அறிமுகப்படுத்தியுள்ளது.ஆனால், இதுதேவையில்லாமல் பாலியல் உணர்வுகளைத் தூண்டுவதாக உள்ளதாக கூறி ஆசிய மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்தக்கூத்தை அமுல்படுத்தப் போகும் கல்லூரி ஆக்லாந்தில் உள்ள கான்கார்டியா வர்த்தக கல்லூரியாகும்.அங்கு அடுத்த ஆண்டு முதல் ஆசிய மாணவர்களுக்கு செக்ஸ் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.இதை தற்போது அங்கு படித்து வரும் 450 ஆசிய மாணவர்களும் படித்தாக வேண்டும்.

இந்தக்கல்வி மூலம் செக்ஸ் குறித்த போதிய அறிவை ஆசிய மாணவர்கள் பெறுவார்கள்.இதனால் தேவையில்லாத கர்ப்பத்தைத் தவிர்க்கமுடியும் என்று அந்தக்கல்லூரியின் இயக்குநரான ஐசக் புவா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்;ஆசியாவைச் சேர்ந்த மாணவர்களுக்கு செக்ஸ் குறித்த அறிவு போதுமானதாக இல்லை.குறிப்பாக செக்ஸ் குறித்த உண்மை அவர்களுக்கு தெரியவில்லை. ஆசிய நாடுகளில் முறையான செக்ஸ் கல்வி திட்டம் இல்லாததே இதற்குக் காரணம்.இந்த நாடுகளில் செக்ஸ் என்பது ஒரு வெட்கப்படும் விடயமாகவே இருக்கிறது.அதுகுறித்து பேசுவது தவறாக பார்க்கப்படுகிறது.ஆனால்,செக்ஸ் குறித்த போதிய அறிவு இல்லாமல் இருப்பது தான் உண்மையில் ஆபத்தானதாகும் என்றார்.

ஆனால்,இதற்கு ஆசிய மாணவர்களிடையே கடும் எதிர்ப்பு தோன்றியுள்ளது.குறிப்பாக மாணவிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.கல்வியாக இது இல்லாமல் செக்ஸ் உணர்வுகளைத் தூண்டி விடுவது போல உள்ளதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்கிடையே ஆசியாவைச் சேர்ந்த மாணவிகள் கர்ப்பமாவது அதிகரித்து வருவதாக நியூசிலாந்து நாட்டின் கருத்தடை கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.2008 ஆம் ஆண்டில் கருத்தரிப்பு செய்த 17 ஆயிரத்து 940 பேரில் 2,875 பேர் ஆசிய மாணவிகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# கேற் மிடில்ரன்

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியத்திற்கும் அவரது நீண்டநாள் காதலியான கேற் மிடில்ரனிற்கும் இடையிலான திருமண நிச்சயதார்த்தம் நிறைவடைந்துள்ளது.

இருவரினதும் திருமணம் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெஸ்ற்மினிஸ்ரரில் நடைபெறுமெனவும் உத்தியோக பூர்வ அறிவிப்புகள் வெளியாகியுள்ளன.

பிரிட்டிஷ் இராஜகுடும்பத்தினரை சந்திப்பதென்பதே அந்நாட்டின் அனைத்து மட்ட பிரஜைகளுக்கும் கைகூடாததும் சிக்கலானதும் அரியதுமான விடயமாகவுள்ள நிலையில் பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்குள் நுழைந்து மகாராணி என்ற அந்தஸ்தை பெறுவதற்குரிய தகுதியை உடையவராக கேத் மிடில்ரன் உள்ளார்.

இந்நிலையில் கேத் மிடில்ரன் மிகவும் அதிர்ஷ்டம் மிக்கவர் என்றுதான் கூறிக் கொள்ளவேண்டும்.

இந்நிலையில் கேற் மிடில்ரனின் பிறப்பு குறித்து நோக்கினால் பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் நிறுவன அதிகாரியான மிச்சல் பிரான்சிஸ் மிடில்ரனிற்கும் பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் விமானச் சிப்பந்தியான கரோல் எலிசபெத்திற்கும் 1982 ஜனவரி 09 ஆம் திகதி மூத்த மகளாகப் பிறந்தார் கேற் மிடில்ரன்.

பேர்க்செயரின் ரீடிங் பகுதியிலுள்ள ரோயல் பேர்க்செயர் மருத்துவமனையில் பிறந்த கேற் மிடில்ரன் பேக் செயரிலுள்ள பக்ள்புரியில் வளர்ந்து வந்தார்.

பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் நிறுவனத்தில் பணியாற்றிய கேற்மில்ரனின் பெற்றோர்கள் 1987 இல் பார்டி பீசஸ் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தனர்.இந்நிறுவனம் சகல நிகழ்வுகளுக்கு தேவையான அலங்கார மற்றும் ஏனைய பொருட்களை விற்பனை செய்து வருகிறது.ஈற்றில் பெருவளர்ச்சி கண்டு மிடில்ரன் குடும்பத்தை கோடீஸ்வரர்களாக்கியது.

தென்கிழக்கு இலண்டனிலுள்ள பேர்க்செயரின் பன்ங்போர்ன் கிராமத்திலுள்ள சென்.அன்ட்ரூ பாடசாலை மார்ல்பரோ கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று பின்னர் சென் அன்ட்ரூ பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு கலைகளின் வரலாற்றுத்துறையில் பட்டப்படிப்பினை பூர்த்திசெய்தார்.

சென்.அன்ட்ரூ பல்கலைக்கழகத்திலேயே இளவரசர் வில்லியத்திற்கும் கேற் மிடில்ரனுக்கும் இடையில் பழக்கம் ஏற்பட்டு நட்பாகி காதலாகி தற்பொழுது திருமணத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பான நிச்சயதார்த்தம் வரை சென்றுள்ளது.

இருவரிடையேயான நட்பும் காதலாக மாற்றம் பெற்றுவிட்டதென்ற செய்தி பரவியதைத் தொடர்ந்து கேற் மிடில்ரன் ஊடகங்கள் மத்தியில் பிரபலமாகி அவரது புகைப்படங்கள் பரவலாக பிரசுரிக்க ஆரம்பித்தன.

இதனைத் தொடர்ந்து 2006 பெப்ரவரியில் மிடில்ரனுக்கு அரச மற்றும் தந்திரோபாய பாதுகாப்பு திணைக்களத்தின் 24 மணிநேர பாதுகாப்பு அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் 2007 ஏப்ரல் 14 த சண் பத்திரிகையில் வில்லியம் கேற் மிடில்ரன் ஜோடி பிரிந்துவிட்டதாக செய்தி வெளியிடப்பட்டது.

இளவரசர் வில்லியம் வேறு ஒரு இளம் பெண்ணுடன் நேரத்தை செலவிடுவதாகவும் இளவரசர் வில்லியம்ஸ் தன்னைத் திருமணம் செய்துகொள்ளக்கூடிய பொருத்தமானவயதில் இல்லையென்றும் கேற் மிடில்ரன் கூறுவதாக செய்திகள் வெளியாகின.

பின்னர் வில்லியம்ஸ் தனது இராணுவப் பயிற்சியை தொடரும் நிலையில் இருவரிடையேயும் பிரிவு ஏற்பட்டு 2007 ஜூனில் மீண்டும் நண்பர்களாக பழகலாம் என்ற நல்லிணக்கத்திற்கு வந்து தமது தொடர்பிற்கு புத்துயிர் அளித்தனர்.

இதேவேளை,2006 இல் கேற் மிடில்ரன் ஜிக்சாவ் ஆடை அமைப்பு நிறுவனத்தின் கொள்வனவு உதவி அதிகாரியானமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் இருவரிடையேயுமான காதல் மீண்டும் தொடர ஆரம்பித்த நிலையில் இருவரும் திருமண பந்தத்தில் இணையப் போவதாக பிரிட்டிஷ் அரச குடும்பம் கடந்த 16 ஆம் திகதி அறிவித்தது.


இதனைத் தொடர்ந்து வில்லியமும் கேற் மிடில்ரனும் கென்யாவில் தமது விடுமுறையை கழித்த நிலையில் தனது தாயாரின் வைர மோதிரத்தை (இளவரசி டயானாவின்)மிடில்ரனுக்கு அணிவித்து நிச்சயதார்த்தத்தை இனிதே நிறைவேற்றினார் வில்லியம்ஸ்.


இதனைத் தொடர்ந்து 2011 ஏப்ரல் 29 ஆம் திகதி இருவரதும் திருமணம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 'ஏப்ரல் 28 ஆம் திகதியை வில்லியம்ஸ் கேற் மிடில்ரன் மட்டும் எதிர்பார்த்துக் காத்திருக்கவில்லை.பிரிட்டிஷ் அரச குடும்பமும் திருமணத்திற்காக முழு உலகமுமே காத்திருக்கின்றது.


**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தியில் இயங்கும் முதல் வான் கலம்

மனித சக்தியால் இறக்கையை அசைத்து தொடர்ச்சியாக பறக்கக்கூடிய விமானம் ஒன்றை முதன் முதலில் இயக்கி புதிய வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பொறியியலாளர்களினதும் கண்டுபிடிப்பாளர்களினதும் பல நூற்றாண்டு கால கனவு தற்போது நனவாகியுள்ளது,இத்தாலிய ஓவிய,சிற்பக்கலைஞர் லியானார்டோ டாவின்சி-1485 ஆம் ஆண்டு ஓர்னிதோப்டர் எனும் வான் கலத்திற்கான வரைப்படத்தை வரைந்தார். அப்போதிருந்து மனிதர்கள் பறவைகளைப்போல் இறக்கை அசைத்து பறப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் ஸ்னோபேர்ட் (பனிப்பறவை) எனப்பெயரிடப்பட்ட மனித சக்தியால் தொடர்ச்சியாக இறக்கை அசைத்துப் பறக்கும் வான்கலமொன்று அண்மையில் கனடாவில் இயக்கிக் காண்பிக்கப்பட்டது.ரொரொன்டோ பல்கலைக்கழகத்தின் வான் பொறியியல் துறையில் பி.எச்.டி.பட்டம் பெற்ற மாணவர் டொட்ரெய்ச்சர்ட் இவ்விமானத்தில் பயணம் செய்தார்.இவ்விமானமானது மிகவும் உயரத்தில் கீழே வீழ்ந்து விடாமல் பயணித்ததுடன் 19.3 விநாடிகளுக்கு 145 மீற்றர் தூரம் பறந்து அதனது சராசரி வேகம் மணித்தியாலத்திற்கு 25.06 கிலோ மீற்றர்களாகும்.


அவர் சைக்கிள் இயங்குவதைப்போல் விமானத்தின் இறக்கையை தனது கால்களால் உந்து இயக்கிச் சென்றார்.விமானத்தின் இறக்கை கயிறுகளாலும் கப்பிகளாலும் உந்துவிசைக்கருவியுடன் இணைக்கப்பட்டிருந்தன.

தனது நீண்ட கால வான்பொறியியல் கனவுகளை ஸ்னோபேர்ட் பிரதிபலிக்கிறது என்று இச்செயற்திட்டத்தின் முகாமையாளரான ரெய்ச்சர்ட் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் எண்ணிக்கையற்ற ஆண்களும் பெண்களும் தங்களது சொந்த சக்தியை பயன்படுத்தி பறவைகளைப் போல பறந்து பார்க்கவேண்டுமென்று கனவுகள் கண்டனர்.அவர்களில் ஆயிரக்கணக்கானோர் இல்லாவிடினும் நூற்றுக்கணக்கானோர் முயன்று பார்த்திருப்பார்கள்.வான்கலங்களின் வரலாற்றில் முதல் சாதனைகளில் ஸ்னோர்பேர்ட் விளங்குகிறது என அவர் கூறினார்.

ஸ்னோபேர்ட்டின் நிறை சுமார் 94 இறத்தல்களாகும்.அதனது சிறகுகள் நீளம் 105 அடிகளாகும்.போயிங் 737 ரக விமானத்தின் இறக்கை நீளத்தை இது கொண்டிருந்தாலும் போயிங் பயணிகள் விமானத்திலுள்ள தலையணிகளின் மொத்த எடையையே ஸ்னோபேர்ட் கொண்டுள்ளது.


விமானி ரெய்ச்சர்ட் இந்த விமானத்தில் பறப்பதற்காக தனது உடலை 18 இறாத்தல்களால் குறைந்திருந்தார்.இச்சாதனையை பதிவு செய்வதற்கான உத்தியோகபூர்வ கோரிக்கை



இந்த மாதம் விடுக்கப்பட்டது.வான்கல விளையாட்டுக்கள் மற்றும் வான்கல சாதனைகளை நிர்வகிக்கும் சர்வதேச விமானவியல் சம்மேளனத்தின் (எவ்.ஏ.ஐ.)அக்டோபர் மாதம் கூட்டத்தின்போது உலகின் முதலாவது 'ஓர்னிதோடப்டரா" இவ்வான்கலம் பதிவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


இவ்விமானம் நடைமுறை ரீதியில் போக்குவரத்துக்கு உகந்ததாகமாட்டாது.எனினும் மனிதர்கள் தமது கனவுகளை நிறைவேற்றுவதற்கு தமது உடல் சக்தியையும் ஆக்கத்திறனையும் பயன்படுத்துவதை இது ஊக்குவிக்கும் என ரெய்ச்சர்ட் தெரிவித்துள்ளார்.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# பின்னால் நடப்பதை படமெடுக்க மினிகமரா

நமக்கு பின் என்ன பேசுவார்களோ? என்ற நினைப்பு எல்லாருக்கும் உண்டு. இனி இதை நினைத்து கவலைப் படத் தேவையில்லை. பின்னால் நடப்பதைக் காட்டும் கமரா விரைவில் அறிமுகமாகிறது. ஈராக்கை



சேர்ந்த போர்ட்டோகிராபி மற்றும் இமேஜ் துறை துணை பேராசிரியர் வபா பிலால் தலைமையில் நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் ஒரு ஆய்வு நடந்தது.

ஆராய்ச்சி பற்றி பிலால் கூறியதாவது;

ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள கருவிக்கு 'தேர்ட் ஐ' [மூன்றாவது கண்] என்று பெயரிட்டுள்ளோம் கட்டை விரல் நகம் அளவில் உள்ள மைக்ரோ கமரா வைத் தலையின் பின்பக்கம் லேசாகத் துளையிட்டு பொருத்த வேண்டும்.இது நம் பின்னால் நடக்கும் அனைத்து செய்கைகளையும் படம் பிடிக்கும். ஒரு நிமிடத்துக்கு ஒருமுறை நிகழ்வுகளை இது பதிவு செய்து கொள்ளும்.

அனைத்துக் காட்சிகளும் தொடர்ந்து பதிவு செய்யப்படும். தேவைப்படும் நேரத்தில் இக்காட்சிகளைப் பார்க்க முடியும். முடி பகுதியில் கமரா பொருத்தியிருப்பது தெரியாமல் இருக்க கருப்பு நிறத்தில் 'லென்ஸ் மூடி' பொருத்தப்படும். இவ்வாறு பிலால் கூறினார். பேராசிரியர் பிலாலுக்கு இந்த கமரா டிசம்பர் 15 ஆம் திகதி பொருத்தப் பட உள்ளது. இதன் வெற்றியைப் பொறுத்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

முக்கிய தலைவர்கள், வி.ஐ.பி.களுக்கு 'தேர்ட் ஐ' மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அசம்பாவிதங்களின் பின்னணியைக் கண்டறிவது பாதுகாப்புப் பணிக்கு பயன்படுத்துவது என பின்னந்தலை கமராவின் பயன்களைப் பட்டியலிட முடியும் என்கிறார் பேராசிரியர் பிலால்.

# தகவல்களை அறிய டிஜிட்டல் மின்நூலகம்

வரலாற்று தகவல்களைப்பற்றி மேலும் விரிவாக அறிந்து கொள்வதற்கு வசதியாக உலக டிஜிட்டல் மின் நூலகம் உள்ளது.

காலத்தால் என்றும் அழியாத பொக்கிஷங்களான வரலாற்று தகவல்களை பாதுகாப்பான முறையில் சேமித்து நமக்கு தேவைப் படும் போது பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இலட்சத்திற்கும் மேற்பட்ட வரலாற்று புத்தகங்களை ஒன்லைன் மூலம் படிக்கலாம்.நமக்கு உதவுவதற்காக உலக டிஜிட்டல் மின் நூலகம் உள்ளது.

அதற்கான இணையத்தள முகவரி தீதீதீ.தீஞ்டு.ணிணூஞ். இந்த தளத்திற்கு செல்வதன் மூலம் நாம் எந்த நாட்டின் வரலாற்று தகவல்களை தெரிந்து கொள்ள வேண்டுமோ அதை தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும்.

அடுத்து வரும் திரையில் அந்த நாட்டைப்பற்றிய அனைத்து வரலாற்று புத்தகங்களும் வரும்.இதில் நமக்கு பிடித்த புத்தகங்களை எளிதாக தேடிப்படிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# அழுக்கு...

வெ.தமிழழகன்



புவனாவுக்கு குழந்தை பிறந்திருந்தது. தாய் பூரணத்தின் மகிழ்ச்சியை சொல்லவும் வேண்டுமா? தொட்டிலை ஆட்டியபடி, 'என் செல்லமே' என கொஞ்சிக் கொண்டிருந்தாள். அப்போது தான் கார்மேகம் வந்து நின்றான். பூரணத்தின் கணவன். மெக்கானிக் கடை வைத்திருக்கிறான்.

மகளிடம் "பேரன் என்ன சொல்கிறானம்மா?" என்றபடியே தொட்டிலை நெருங்கினான்.

"லேட்டாக வந்த தாத்தாவிற்கு உதை தரப்போகிறானாம்!" என்றாள் மகள் புவனா.

"கார் வழியில் நின்று விட்டது. நிறுத்தி, பழுது பார்த்து மீண்டும் கிளம்பி வருவதற்குள் தாமதமாகி விட்டது என்பதெல்லாம் என் பேரனுக்குத் தெரியும். அதனால்தான் உதைக்க வேண்டியவன் 'உம்மா' கேட்கிறான்"

புவனாவும் அவள் தாயும் கலகலத்துச் சிரித்தனர்.

தொட்டிலை நெருங்கிக் குனிந்த கார்மேகம் குழந்தையைத் தூக்க ஆவலுடன் போனான். சட்டென அவன் கரங்கள் தயங்கின. உள்ளங்கைகளைப் பார்த்தான். கார் பழுது பார்த்ததில் கொஞ்சம் அழுக்கும், கறைகளும் கையில். குழந்தையை தூக்கத் தயங்கினான்.

அவன் தயக்கத்திற்கு காரணம்...

பெற்றோரின் ஒரே மகள்தான் பூரணி. படித்து முடிந்து செவிலியாகப் பணியாற்றினாள். அது ஒரு பெரிய மருத்துவ நிறுவனம். அவள் சென்றுவர கார் வசதிகூட செய்து கொடுத்திருந்தது.

அன்று ஒரு சத்திர சிகிச்சை முடித்து நள்ளிரவில் காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். எதிர்பாராமல் கார் திடீரெனப் பழுதாகி நிற்க... பதற்றத்தில் கைகளைப் பிசைந்தநேரத்தில் எதிரே ஸ்கூட்டரில் வந்தான் கார்மேகம். அவனிடம் விபரம் சொன்னாள் பூரணம். அவன் காரை சோதித்தான்.

"இதை கடையில் வைத்துத்தான் சரி செய்ய வேண்டும். உங்களுக்கு ஆட்சேபனை இல்லாவிட்டால்... என் ஸ்கூட்டரில் உங்களை வீட்டில் சேர்க்கிறேன். திரும்பவந்து காரை எங்கள் கடைக்கு எடுத்துச் செல்கிறேன்" என்று சொன்னான்.

நள்ளிரவு, தனிமை. ஆள் நடமாட்டமில்லை. எனினும் கூட... கண்ணியமான அவனது பேச்சும், பார்வையும் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. "சரி" என்றாள்.

ஸ்கூட்டரில் அழைத்துப் போய் வீடு சேர்த்தான் கார்மேகம்.

அதுவே அவர்களுக்குள் காதலானது. அடுத்தடுத்த சந்திப்பு இரு வீட்டு பெற்றோர் சம்மதத்துடன் மணமேடையில் கொண்டு நிறுத்தியது.

காதல் வாழ்வில் கிடைத்தது பெண் குழந்தை. அவள் பிரசவித்த தகவல் தெரிந்து ஆஸ்பத்திரிக்கு ஓட்டமாய் வந்தான். ரோஜாப்பூவாய் கை, கால்களை அசைத்துக் கொண்டிருந்த குழந்தையை ஆசையுடன் தூக்கப் போனான்.

"குழந்தையை தூக்காதீங்க, உங்க கையிலிருக்கும் மையெல்லாம் குழந்தையின் மீது ஒட்டிக் கொள்ளுமே? உங்களுக்குக் கொஞ்சமாவது யோசனை இருக்கிறதா? என்றாள்.

அவள் வார்த்தைகள் அவனை சுட்டன.

அதன் பிறகு அவன் குழந்தையை கொஞ்சுவதோடு சரி. தொடுவதில்லை.

குழந்தை புவனாவும் வளர்ந்து ஆளாகி... மணமாகி இதோ அவளும் ஒரு ஆண் மகவை பெற்றிருக்கிறாள்.

இருபது ஆண்டுகள் கழிந்து... மீண்டும் அதே நிகழ்ச்சி...

இப்போது... பெரிய மெக்கானிக் நிறுவனத்தின் முதலாளி கார்மேகம்...! வரும் வழியில் பழுதான காரை சரி செய்தபடி, குழந்தையைப் பார்க்கும் ஆவலில் அப்படியே ஓடிவந்து விட்டான்.

"நான் குழந்தையைத் தூக்கலாமா அம்மா?" மகளை நோக்கி அவன் கேட்ட கேள்வி பூரணத்தின் மனதை அறைகிறது.

இருப்து ஆண்டுகளுக்கு முன் அடைந்த அதே பரிதவிப்பு!

"என்னப்பா, இப்படி கேட்கிறீர்கள்? உங்கள் பேரனைத் தூக்க என்னிடம் அனுமதி கேட்கிறீர்களே?" தழுதழுத்தாள் புவனா.

"இல்லையம்மா, என் கையெல்லாம் மையும் அழுக்குமாய் இருக்கிறதம்மா, அதனால்தான் கேட்டேன்."

"அப்பா! அப்பழுக்கில்லாத உங்க அன்புக்கு முன்னால் இந்த மை அழுக்கெல்லாம் பொய்யானவை. குழந்தையைத் தூக்குங்கள்" என்றாள் புவனா.

மகளின் அந்த வார்த்தையைக் கேட்டு... கண்ணீர் மல்கினாள் பூரணம். சின்ன வயதுப் பெண் மனதில்தான் எத்தனை பெருந்தன்மை?

"புவனா... உயர்ந்த மனம், பெருந்தன்மையெல்லாம்... தாயாகியுள்ள உன்னிடம் இருக்கிறதம்மா! என்னிடம் உயிர் வாங்கிய நீ எங்கே? உன் அப்பாவிடமே குழந்தை அழுக்காகிவிடப் போகிறது என்ற சொன்ன நான் எங்கே...!" அம்மா அழப்பார்க்கிறாள்.

குழுந்தையைத் தூக்கி உச்சி முகர்ந்து கார்மேகத்தின் கண்களில் கண்ணீர். பொக்கை வாயைத் திறந்து சிரித்தபடி கார்மேகத்தின் சட்டையை நனைக்கிறது பேரக் குழந்தை... அதைப் பார்த்த பூரணம், புவனா இருவரும் எழுப்பிய சிரிப்பொலியில்... தானும் சேர்ந்து கொள்கிறான் கார்மேகம்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாம் உனக்காக...

கவிதைகள் என்பது
உனக்காக...
நான்
வரைந்த
ஓவியம்.

சிற்பங்கள் என்பது
உனக்காக...
நான்
செதுக்கிய
உந்தன் திருவுருவங்கள்.

இதயம் என்பது
உனக்காக...
நான்
சுமந்து கொண்டிருக்கும்
உயிர்.

கனவுகள் என்பது
உனக்காக...
நான்
எடுத்துக் கொண்டிருக்கும்
திரைப்படம்.

உள்ளம் என்பது
உனக்காக...
நான் ஏற்படுத்திக்கொண்ட
திருக்கோவில்.

பிருந்தாவனம் என்பது
உனக்காக...
நான்
கட்டிக் கொண்டிருக்கும்
வசந்த மாளிகை.

அன்பு என்பது
உனக்காக...
என் மனதில்
தோன்றிய
பெருங்கடல்.

மகளே!
மகிழ்ச்சி என்பது
உன்னைப் பெற்ற பின்பு...
என் மனதில்...
தோன்றிய....
உணர்வு...

**வல்வை மு.ஆ.சுமன்**

## துடைத்துக்கொள்

எனக்காய் அழும் வானமே
உனக்கான
என் ஆறுதல் பரிசு
என் சோகமெனும்
கைக்குட்டைதான்
துடைத்துக்கொள்!

**எஸ்.அயில்ராஜ்,
கஹவத்தை.**

## சிறையான வார்த்தை

நம் இருவர் மனசும் அறியும்
இருவர் கண்களுக்கும் தெரியும்
நாம் பரிமாறும் ஒவ்வொரு சொல்லிலும்
கலந்திருக்கும்
இருவர் உதடு மட்டும் சொல்ல விடாமல்
தொண்டைக்குழிக்குள் சிறை
வைத்திருக்கும் வார்த்தை
'உன்னோடு நான் மட்டும் வாழ வேண்டும்'

**எஸ்.மனோஜ், கொழும்பு-15.**




## காட்டிக்கொடுப்பதற்கா முத்தமிடுகிறாய்...?

உன் மூதாதைகள்
அமைத்து வைத்த பாடையில்
என்னை அனுப்பி வைக்க
வேண்டுமென்றா?
என் கன்னத்தில் முத்தமிட்டு
காட்டிக் கொடுக்கிறாய்
தமிழனென்று!

வாழ்க்கை முழுவதும் நீ!
சுமப்பவன் என்றெண்ணியோ
ருசிப்பதில் பாதியை எனக்கு
தினந்தோறும் தாரவார்க்கிறாயே
இறுக அணைத்தபடி

உன் நகங்களைக் கொய்து
நாவினை அறுத்தாலும்
தமிழுக்கே உன் தலை வீழனுமென
நானருந்திய பாலில் ஊட்டி
வளர்த்த
உயிரே! என் அன்னையே!
உன்னால் நானுமொரு புகழேந்
தியே...!

**பி.திமோதிஸ்**

## முத்தம்மாள்

காலமெல்லாம் கஷ்டப்பட்டு
களங்கமென்னும் சம்பாதியத்தை
பெற்ற பாவிகள்
நான்காம் நம்பர் மலையில்!

மணமாலை சூடாமல்
மானமிழந்த
முத்தம்மாள்! மலர்மாலையுடன்
உறங்குகிறாள் நிலைகுலைந்து
சவப்பெட்டியில்!

திட்டுவாங்கித் திண்டாடி -
திணறிச்
சென்ற மூச்சுடன்
குளிக்கின்றாள் நம்மூர்
முதலைக் கண்ணீரில்!

முத்தம்மாள்!
கண்ணீரும் உனக்கு
சொந்தமில்லை! கணக்கில்
ஆறு அடியும்
உனக்குச் சொந்தமில்லை!

ஆனால்!
உன் நிழலாய் வந்த பழி
ஊர் அழியும் வரை -
உன் கல்லறையில்
எம் தோட்டக்காட்டான்
பட்டத்தைப் போல்!

**ந.விஜயகுமார்**

## என் அண்ணாவுக்காக...

சோகத்தில் ஆழ்ந்த
மணல் படுக்கைகளை
கடலலைகள் வந்து
தாலாட்டிச் செல்லும்
என் வாழ்விலும்
என் சோகங்களைத் தீர்க்க
சந்தோஷங்களை
பரிசளிக்க வந்த
உறவு நீ அண்ணா!

சகோதரங்களாய்
செல்ல சண்டைகளை
உன்னோடு நான் போட்டபோதும்
அன்பையும் பாசத்தையும்
என்மேல் மழையென
பொழிந்தாய் -என்
மனம் காயப்படும்...
ஆதரவாய் வந்து
ஆறுதல் கூறிடுவாய்

வாழ்வின் வெற்றி முகட்டை
நான் தொட்டுவிடுவதற்காய்
அன்பால் படியமைத்து
அறிவுரையால் ஏணிதொடுத்து
சரியான பாதையில்
வழிநடத்திச் சென்றாய்
என் வாழ்நாள் முழுதும்
நன்றி கூறிடுவேன்
பிரம்மனுக்கு-காரணம்
இறைவனை
என் அண்ணனாய்
அனுப்பி வைத்தமைக்கு.

**...ல், கோப்பாய்.**

## வெற்றியின் படி தோல்வி

ஓ மனமே...
ஓங்கி ஒலித்திடு...
ஒளிமயமான கணமென்று
சோர்ந்து விடாதே...
சோகத்தை தூக்கியெறி
சேர்ந்து வாழ்வோம்
நிமிர்ந்து நில் மனமே...

மனம் கொண்டதே வாழ்வு
மனதைத் திடமாக்கிடு...
மனம் திறந்து பேசிடு...
மறுப்புகளை மறந்திடு...
வெறுப்புகளை வென்றிடலாம்

உன்னை யாரும் உயர்த்திலார்
உன்னை நீயே உயர்த்திடு
உயர்ந்த எண்ணங்கொள்
உயர்ந்தவனாகிடு-இன்றே
நாளை என்ற நாமமில்லை
இக்கணமே அக்கணமாக்கி
கடின உழைப்பு செய்
காத்திராதே காலத்துக்காய்

தோல்வி கண்டு துவளாதே
வீறு கொண்டு எழு...
விழிப்புடன் செயற்படு...
வெற்றி உன் பக்கம்
கைதட்டி வரும்...

**யாழ்.அஞ்சனா**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
**இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15**
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்களின் கதை

இருபது வயதில்-சிலிர்ப்பிக் கொண்டு நிற்கும் தலை முடி... அதை அடிக்கடி கையால் 'ஸ்டைலாக' கோதிக் கொண்டு ரோட்டில் போகும் பெண்களை ஒரு 'லுக்'... அடிக்கடி கண்ணாடி முன் நின்று குடம், குடமாக பவுடரைக் கையில் கொட்டி முகத்தில் அப்பி அழகு பார்க்கும் பொறுமை...

முப்பது வயதில்-பெயருக்குத் தலையை சீவிக்கொண்டு போனால் போகிறது என்று 'தம்மாத்துண்டு' பவுடரை முகத்தில் தடவிக்கொண்டு அரைகுறையாய் கண்ணாடி பார்க்கும் அலுப்பு...

நாற்பது வயதில்- 'கீழே விழுந்து விடுவேன்' என மிரட்டும் முடியைக் கஷ்டப்பட்டு இழுத்துப் பிடித்துக் குவித்து வைத்து சீவி... பவுடர் டப்பாவைப் பார்த்தாலே கடுப்புடன் தூக்கி வீசி... கண்ணாடி என ஒன்று இருப்பதையே கண்டுகொள்ளாமல் வேலைக்குச் செல்லும் அவசரம்...


இவை தான் பெரும்பாலும் ஆண்கள் தங்களை அழகுபடுத்திக்கொள்ளும் விதம். திருமணத்தின் போதும் மட்டும் ஆண்கள் தங்களைப் பெண்கள் கவர வேண்டும் என்பதற்காக அழகுபடுத்திக் கொள்வதில் நேரத்தைச் செலவிடுகின்றனர். திருமணத்திற்குப் பின் தங்களுக்குள் சுய கட்டுப்பாடு விதித்துக்கொண்டு குடும்ப பாரத்தை சுமக்க வருவாயைப் பெருக்குவதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். சிலர் மன உளைச்சலில் சிக்கி மது போதை, புகைப் பழக்கங்களுக்கு அடிமையாகின்றனர். இதனால் உடல் ஆரோக்கியம் பாதித்து விரைவில் முகப்பொலிவை இழக்கின்றனர்.

வியர்வை சிந்தி உழைத்து சம்பாதித்த பணத்தை இப்படி வீணாக்குவதைத் தவிர்த்து அழகுபடுத்தி கம்பீரத்தை பொலிவாக்கினால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். செயல் எண்ணங்களில் மாறுதல் ஏற்பட்டு வெற்றி கிட்டும் ஆண்களில் விதிவிலக்காக சிலர் மட்டும் சிகை அலங்காரத்தை மட்டும் ஆண்கள் அழகு நிலையத்தில் செய்து கொள்கின்றனர். பெண்களுக்குத் தனியாக அழகு நிலையங்கள் அதிகளவில் உள்ளதைப்போல் ஆண்களுக்கு எனத் தனியாக விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் மட்டுமே உள்ளன.

ஆண்கள் அழகு நிலைய உரிமையாளர் ஒருவர் கூறுகையில்;

'ஆண்களின் கம்பீரத்திற்கு பொலிவு தேவை. தற்போது கல்லூரி மாணவர்கள் மட்டுமன்றி 60 வயதிலும் அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர். மாதம் ஒரு முறை அழகு நிலையத்துக்குச் சென்று அழகுபடுத்தினால் புத்துணர்ச்சி உறுதி, முடிகொட்டுவதைத் தடுக்க பக்கவிளைவுகள் இல்லாத சித்தா, ஆயுர்வேத டொனிக், 'பேஷியல்' செய்ய பழம், வேர்கள் கலந்த மூலிகைகளைப் பயன்படுத்துவது நல்லது என்றார்.

எல்லா விடயத்திலும் ஆண்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்று கருத்து நிலவும் இக்காலகட்டத்தில் பொலிஸில் அதிகம் சிக்குபவர்களும் 'பாவப்பட்ட' ஆண்கள்தான்.



பொதுவாகப் பெண்கள் சிந்தும் கண்ணீரை நம்பி சரியாக விசாரிக்காமல் ஆண்கள் மீது பொலிஸ் வழக்குப் பதிவு செய்கிறது. 'இது உண்மைதான்' எனப் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது இருதரப்பையும் அழைத்து, எங்கள் முன் பேசச் செய்வோம். அப்போது ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி புகார் சொல்லும் போது யார் மீது தவறு என்பது தெளிவாகிவிடும். குடும்பப் பிரச்சினையைத் தீர்க்கவே எங்களைத் தேடி வருவதால் முடிந்தளவிற்கு சமரசம் செய்து அனுப்பிவைக்கிறோம். ஆண்மைக் குறைவு, கள்ளத்தொடர்பு, வரதட்சணை போன்ற பிரச்சினைகளில் சமரசம் ஆக மாட்டார்கள். இதைத் தொடர்ந்தே ஆண்கள் மீது வழக்குப் பதிவு செய்கிறோம். பெரும்பாலும் ஆண்கள் கள்ளத் தொடர்பு வைத்திருப்பதாகத்தான் புகார் வருகின்றன. வரதட்சணை கேட்டு மிரட்டும் புகார் குறைவு என்றார்.

பல்வேறு அம்சங்களுக்காக தேசிய, சர்வதேச தினங்கள் கடைப்பிடிக்கும் நிலையில் ஆண்களுக்காகத் தினம் கொண்டாட அவசியம் ஏன்? ஆண்களுக்கு என்ன பிரச்சினை என்பது தொடர்பில் ஒருவர் கூறுகையில்;

தற்போது ஆண்கள் தங்கள் உரிமை பற்றிப் பேசுவதற்குத் தயக்கம் உள்ளது. ஆண்டுக்குக் கோடிக்கணக்கான ஆண்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக கைதாகின்றனர். இதில் 85 சதவீத கைதுகள் தேவையில்லாதவை. கைதாகும் நபர்களில் 20 சதவீதம் பேர் மட்டும் தண்டனைக்குள்ளாகின்றனர். பெண்களுக்காக பல்வேறு மருத்துவத் திட்டங்களை அறிவிக்கும் அரசுகள், ஆண்கள் விடயத்தில் அக்கறை செலுத்துவது இல்லை. வரிசெலுத்துவோரில் 82 சதவீதம் பேர் ஆண்கள். அரசு வருமானத்தில் பெரும்பகுதி மதுவிற்பனையால் கிடைக்கிறது. குடிப்பழக்கத்தால் ஆண்கள் இறப்பு அதிகம். ஆண்கள் குடிப்பழக்கத்தை நிறுத்தினால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். மது விற்பனையை அரசு நிறுத்துமா? விலங்குகளுக்குக் கூட தனி வாரியம் அமைக்கும் அரசு ஆண்களுக்கு நல வாரியம் அமைத்து அவர்களது பிரச்சினைகள் குறித்து ஆராய வேண்டும் என்றார்.

தேசிய ஆண்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பின் கணக்கெடுப்பின் படி

★ கடந்த 12 ஆண்டுகளில் வீட்டில் நடந்த கொடுமைகளால் 1.7 இலட்சம் மணமான ஆண்கள் தற்கொலை செய்துள்ளனர்.

★ 2001-2005 க்கு இடையே 13 இலட்சம் ஆண்கள் வேலையை இழந்து உள்ளனர்.

★ மணமான மூன்று ஆண்டுகளுக்குள் 98 சதவீத ஆண்கள் சித்திரவதைக்கு ஆளாகின்றனர்.

இந்தியாவில் பெண்களைவிட ஆண்களே அதிகம் தற்கொலை செய்து கொள்கின்றனர். ஆண்கள் 57 ஆயிரம் பேரும் பெண்கள் 30 ஆயிரம் பேரும் தங்கள் முடிவைத் தேடிக்கொள்கின்றனர்.

மனநல நிபுணர் ஒருவர் இது தொடர்பில் கூறுகையில்;

ஆண்களே வெளியில் அதிகம் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இதனால் மனச்சோவுக்கு ஆளாகி தற்கொலை செய்கின்றனர். சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளும் ஆண்களிடமே அதிகம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாத நிறைவேற்ற இயலாத போது தற்கொலை நிகழும் வாய்ப்பு அதிகம். எத்தனை தான் ஆண்,பெண் சமம் என்று கூறி வந்தாலும் அது இன்னமும் வரவில்லை. அது வரும்வரை இந்நிலை இருக்கவே செய்யும். பெண்களைப் போல ஆண்கள் தங்கள் உடல் நலம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. மது, போதைப் பழக்கங்களுக்கு ஆட்படுவதால் அதுவே பிரச்சினைகளையும் ஏற்படுத்தி விடுகிது. தவறான பழக்கங்களுக்கு அடிமையாகிவிடுவதும் தற்கொலைக்கு முக்கிய காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷெஸ் போர் ஆரம்பம்

பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டு வரும் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நடைபெறுகிறது.

அவுஸ்திரேலியாவுக்கும், ரிக்கி பொண்டிங்கிற்கும் வாழ்வா, சாவா தொடராகும் இது. மாறாக இங்கிலாந்து அணியில் எப்போதும் இல்லாதளவுக்கு தன்னம்பிக்கையும் அணி உணர்வும் கூடியுள்ளது.

ரிக்கி பொண்டிங் தலைமையில் 3 டெஸ்ட் போட்டிகளை தொடர்ச்சியாக அவுஸ்திரேலியா தோற்ற நிலையில் களமிறங்கியுள்ளது. ஆனால் பிரிஸ்பேன் மைதானத்தில் அவுஸ்திரேலியா 1988 ஆம் ஆண்டிற்கு பிறகு தோற்றதேயில்லை.

இந்தச்சாதனையை இங்கிலாந்து மாற்றியமைக்கக் களமிறங்கியுள்ளதென்று எதிர்பார்க்கலாம். பயிற்சி ஆட்டத்தில் இரண்டு வெற்றிகளைப் பெற்ற இங்கிலாந்து அவுஸ்திரேலியா ஏ-யுடன்




சிறப்பாக விளையாடியது.

கிரேம் ஸ்வான் இந்தத் தொடரில் ஒரு முக்கியமான பந்து வீச்சாளராக உயர்வு பெறுவார் என்று கருதப்படுகிறது. பின் வரிசையில் இவரது துடுப்பாட்டம் பரிமளிக்கும் என்று தெரிகிறது. ஏனெனில் அவுஸ்திரேலியா கடந்த சில போட்டிகளாக கடைசி விக்கெட்டுகளை வீழ்த்துவதில் மிகுந்த சிரமப்பட்டு வருகிறது.

அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் ரிக்கி பொண்டிங்கின் மிகப் பெரிய இனிங்ஸ்களை அடிப்படையாக கொண்டுள்ளது. மற்றபடி ஷேன் வற்சன், சைமன் காடிச் ஆகியோர் தவிர மற்ற வீரர்கள் சுமாராகவே ஆடி வருகின்றனர். மேலும் மைக் ஹஸி இன்னும் தனது அதிரடியைக் கடைப் பிடிக்கவேண்டும்.

வற்சன் சேவாக் போல் மட்டையைச் சுழற்றி தொடக்கத்திலேயே பந்து வீச்சாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்குவதன் மூலம் சில உடைப்புககளைச் செய்ய முடியும்.

முதலில் கிரகாம் ஸ்வானின் பந்து வீச்சை அடித்து நொறுக்கவேண்டும். ஏனெனில் அவர் செட்டில் ஆகிவிட்டால் அவுஸ்திரேலியாவின் நடுக்கள வீரர்களை (பொண்டிங் உட்பட) பதம் பார்ப்பார். எனவே ஸ்வானை இலக்காக எடுத்து தாக்க வேண்டும்.

இங்கிலாந்தின் துடுப்பாட்டம் பலமானதுதான். ஆனால் சமீபத்தில் பாகிஸ்தானின் ஆசிப், அமீர் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் ஆகியோர் ஆடிப் போகச் செய்தனர். அவுஸ்திரேலியா முதலில் ஸ்ட்ராஸ், டிராட், பீற்றர்சன் ஆகியாரை இலக்காக்குவது அவசியம். பிறகு கொலிங்வூட். ஏனெனில் கொலிங்வூட் லக்ஷ்மண் போன்ற ஒரு வீரர் அணி நெருக்கடியில் இருக்கும் போது விளையாடக்கூடியவர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து ஸ்ரூவர்ட் புரோட், ஜேம்ஸ் அண்டர்சன். இளம் வீரர் ஸ்ரீவ் பின் ஆகியோருடன் ஸ்வானையும் சேர்த்து பலமாக உள்ளது.

அவுஸ்திரேலியா பந்து வீச்சு பலவீனமாக உள்ளது. ஆனால் மிட்செல் ஜான்சனின் பந்து வீச்சு கவலையளிப்பதாக அவுஸ்திரேலியாவுக்கு உள்ளது. மேலும் ஹில் பென்ஹாஸ், பீற்றர் சிடில் ஆகியோரில் ஹில் பென்ஹாஸ் சிறப்பாக உள்ளார். ஆனால் சிடில் நீண்ட நாட்கள் கழித்து டெஸ்ட் போட்டிக்கு வந்துள்ளார். எனவே அவரது பந்து வீச்சு பற்றி ஒன்றும் கூற முடியாது.

பிரிஸ்பேனில் அவுஸ்திரேலியாவை வெற்றி பெற முடியாமல் செய்தால் நிச்சயம் அதற்குப் பிறகான போட்டிகளில் அவுஸ்திரேலியா நிச்சயம் வெற்றிக்காக தத்தளிக்கநேரிடும்.

2004 ஆம் ஆண்டு சௌரவ் கங்குலி தலைமையில் இந்தியா சென்ற போது பிரிஸ்பேன் போட்டியில் இந்தியா டிரா செய்தது. இதனால் அதற்கு அடுத்த போட்டியில் அடிலெய்டில் அவுஸ்திரேலியா தோல்வியைத் தழுவ நேரிட்டது. இதனால் ஸ்ரீவோ கடும் நெருக்கடிக்குள்ளானார்.

எனவே இங்கிலாந்து பிரிஸ்பேன் மைதானத்தில் அவுஸ்திரேலியாவை வெற்றி பெற விடாமல் தடுத்தாலே ஆஷஸ் தொடரை அங்கு 1986-87 க்கு பிறகு கைப்பற்றுவதில் ஒரு முன்னெடுப்பைச் செய்வதாய் அமையும்.

**அணி விபரம்:**

அவுஸ்திரேலியா: ரிக்கி பொண்டிங், சைமன் கெட்டிச், ஷேன் வற்சன், கிளார்க், ஹஸி, நோர்த், ஹாடின், ஜான்சன், சிடில், டோஹெர்டி, ஹில் பென்ஹாஸ்.

இங்கிலாந்து: ஸ்ட்ராஸ், குக், ஜொனாதன் டிராட், கெவின் பீட்டர்சன், போல் கொலிங்வூட், இயன் பெல், மேட்பிரையர், புரோட், ஆண்டர்சன், ஸ்வான், ஸ்ரீவ் பின்.

# இது வரலாறு



கிரிக்கெட் அரங்கில் இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகள் பரம எதிரிகளாக வலம் வருகின்றன. இவ்விரு அணிகள் மோதும் பாரம்பரியமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடருக்கு சுவாரஸ்யமான வரலாறுண்டு.

1882இல் லண்டன் ஒவலில் நடந்த டெஸ்ட் போட்டியை மறக்க முடியாது. இதில் அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்தை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது. இது குறித்து லண்டன் ஸ்போர்ட்டிங் டைம்ஸ் பத்திரிகையில் ரெஜினோல்ட் ஷர்லி புரூக்ஸ் மிகவும் கேலியாக விமர்சனக் கட்டுரை எழுதினார்.

அதில் "1882 ஆகஸ்ட் 29 ஆம் திகதி ஒவல் மைதானத்தில் இங்கிலாந்து அணி மரணமடைந்து விட்டது. இதற்காக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அணியின் உடல் எரிக்கப்பட்டு அதன் சாம்பல் அவுஸ்திரேலியாவுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது" என கண்ணீர் அஞ்சலி போல குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆஷஸ் பிறந்தது

பின்னர் 1882-83 இல் இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியா சென்றது. அப்போது இழந்த சாம்பலை (ஆஷஸ்) இங்கிலாந்து அணி மீட்குமா என்று செய்திகள் வெளியாகின. இம்முறை இவோ பிளிக் தலைமையிலான இங்கிலாந்து அணி தொடரை 2-1 என வென்று பதிலடி கொடுத்தது.

இதையடுத்து மெல்பேர்னில் சில பெண்கள் சேர்ந்து மூன்றாம் டெஸ்டில் பயன்படுத்திய 'பெயில்சை' எரித்து அதன் சாம்பலை சுமார் 6 அங்குல உயரமுள்ள செம்பழுப்பு நிற மண்ணால் செய்யப்பட்ட கலசத்தில் போட்டு கப்டன் பிளிக்கிடம் கொடுத்தனர்.

எரிக்கப்பட்ட பொருள் குறித்து பல்வேறு செய்திகள் கூறப்படுகின்றன. சிலர் 'பெயில்ஸ்' அல்ல பந்து என்கின்றனர். ஒரு பெண்ணின் முகத்தை மூடியிருந்த துணி எரிக்கப்பட்டு அதன் சாம்பல் தான் கலசத்தில் உள்ளதாக கப்டன் பிளிக்கின் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

தற்போது லோர்ட்சில் உள்ள மெரில்போன் கிரிக்கெட் கிளப் அருங்காட்சியகத்தில் கிண்ணம் போன்ற அந்த சிறிய ஆஷஸ் கலசம் பத்திரமாக வைக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பின் இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகள் மோதும் டெஸ்ட் போட்டிகள் ஆஷஸ் தொடரென அழைக்கப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் நடத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sport.indd 1
Process Cyan Process Magenta Process Yellow

# தங்கம் வெல்ல உதவிய ஜாக்கிசான்







'ஹொலிவூட்' நடிகர்களில் மிகவும் பிரபலமானவர் ஹொங்காங் நடிகர் ஜாக்கி சான். இவரது படங்களைப் பார்க்க அனைத்து வயதினரும் ஆசைப்படுவார்கள். இவரது திரைப்படம் ஆசிய விளையாட்டு போட்டியில் தங்கம் வென்று சாதிக்க ஒருவருக்கு உதவியுள்ளது.

சீனாவின் குவாங்சு நகரில் 16 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி நடக்கிறது. இதில் ஆண்களுக்கான ''வூஷு'' போட்டியின் ''நான்குயன் அன்ட் நான்கன்'' பிரிவில் சீனாவின் ஹுயங் குயங்யுயன் தங்கம் வென்று சாதித்தார்.

தங்கப்பதக்கம் வென்ற குயங்குயன் கூறுகையில்;

''ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றது மகிழ்ச்சியளிக்கிறது. இதற்கு ''ஹொலிவூட் நடிகர் ஜாக்கி சான் முக்கிய காரணம். ஏனெனில் எனது குழந்தைப் பருவம் முதல் ஜாக்கி சான் படங்களை மிகவும் ரசித்து பார்ப்பேன். இவரது படங்கள் மூலம் ''வூஷு'' போட்டியில் பங்கேற்க வேண்டுமென்ற ஆர்வம் எனக்குள் பிறந்தது. இவரையே ''ரோல் மொடலாக்'' கொண்டு செயற்பட்டு வருகிறேன்.

இதற்கேற்ப எனது பெற்றோர்களும் ''வூஷு'' போட்டியில் சேர்ந்து பயிற்சி பெற நன்கு ஒத்துழைப்பு தருவதாகவும் தெரிவித்தார்.

# காயத்தால் ரைடர் நாடு திரும்புகிறார்






நியூசிலாந்து அணியில் காயமடைந்துள்ள சகல துறை வீரர் ஜெஸி ரைடருக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பிராங்க்ளின் சேர்க்கப்பட்டுள்ளார்.

அகமதாபாத்தில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியின்போது ரைடருக்கு முழங்காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து விளையாடியதால், நாக்பூரில் நடந்த கடைசி டெஸ்ட் போட்டியில் அவர் ஓட முடியாமல் சிரமப்பட்டார்.

இதையடுத்து, இந்திய அணியுடனான ஒருநாள் தொடரிலிருந்து விலகியுள்ள ரைடர் சிகிச்சைக்காக நாடு திரும்புகிறார்.

இந்திய டெஸ்ட் தொடரில் ரைடர் 5 இனிங்சில் விளையாடி 274 ஓட்டம் எடுத்தது குறிப்பிடத்தக்கது. இவருக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பிராங்க்ளின் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாக நியூசிலாந்து தேர்வுக் குழு தலைவர் மார்க் கிரேட்பாட்ச் தெரிவித்தார்.

இந்திய-நியூசிலாந்து அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி 28ஆம் திகதி கவுகாத்தியில் நடக்கிறது.

# பெடரரிடம் வீழ்ந்த முரே

ஏ.ரீ.பி.டெனிஸ் போட்டித் தொடரில் அண்டி முரேயை வீழ்த்தி ரோஜர் பெடரர் இலகுவாக வெற்றியீட்டியுள்ளார்.

இலண்டன் ஓ2 அரங்களில் நடைபெற்ற இவ்போட்டியில் ஆயிரக்கணக்கான முரே ஆதரவாளர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கும் வகையில் பெடரர் போட்டியில் இலகுவாக வெற்றியீட்டினார்.

ரவுன்ட் ராபின் சுற்றில் ரோஜர் பெடரர் 6-2 மற்றும் 6-4 என்ற செற் கணக்கில் அண்டி முரேயை வீழ்த்தி வெற்றியீட்டியுள்ளார்.

டெனிஸ் உலக தர வரிசையில் முதல்எட்டு நிலைகளை வகிக்கும் வீரர்களுக்கிடையில் இந்தப்போட்டி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் அண்டி முரேயை எதிர்த்தாடிய இறுதி இரண்டு சந்தர்ப்பங்களிலும் பெடரர் தோல்வியை தழுவியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்டி முரே சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியதாக கருத முடியாதென பெடரர் தெரிவித்துள்ளார். ஆரம்பம் முதலே சிறந்த முறையில் விளையாடியதாக பெடரர் குறிப்பிட்டுள்ளார்.



# தொடர்ந்தும் இந்தியா முதலிடத்தில்

நியூசிலாந்து அணியுடன் நடந்த டெஸ்ட் தொடரில் 1-0 என்று வென்ற இந்திய அணி டெஸ்ட் போட்டிகளுக்கான ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்திலிருக்கிறது. சர்வதேச கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் வெளியிட்ட பட்டியலின்படி தரவரிசை விபரம்.

| தரம் | நாடு | புள்ளி |
|---|---|---|
| 1. | இந்தியா | 129 |
| 2. | தென்னாபிரிக்கா | 119 |
| 3. | இலங்கை | 115 |
| 4. | இங்கிலாந்து | 112 |
| 5. | அவுஸ்திரேலியா | 110 |
| 6. | பாகிஸ்தான் | 83 |
| 7. | நியூசிலாந்து | 80 |
| 8. | மேற்கிந்தியா | 79 |
| 9. | பங்களாதேஷ் | 7 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sport.indd 2
Process Cyan Process Magenta Process Yellow

உலக வலம்
ச.துஷ்யந்தினி



# துயரத்தில் முடிவடைந்த களியாட்டம்

## கம்போடிய வரலாற்றில் பதிவாகியுள்ள மற்றொரு துன்பியல் நிகழ்வு

பார்க்கப்போனால் துன்பத்தை மறுபக்கமாகக் கொண்டிராத மகிழ்ச்சியே உலகில் இல்லை போலும்' என்ற மூத்த எழுத்தாளரொருவரின் ஆதங்கம் உலகின் தற்போதைய நிகழ்வுகளில் அடிக்கடி பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

மகிழ்ச்சிகரமான தருணங்கள் கூடவே மறக்க முடியாத துயரங்களையும் பரிசளிப்பது ஜீரணிக்க முடியாத கொடூரமாகும்.

இந்த வகையைச் சேர்ந்ததே இவ்வார முற்பகுதியில் கம்போடியாவில் இடம்பெற்ற துன்பியல் நிகழ்வு.

கடந்த திங்கட்கிழமை கம்போடியாவில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வொன்றில் ஏற்பட்ட சனநெரிசலில் 400 பேர் உயிரிழந்ததுடன் 1000 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

இதைவிட இவ் அனர்த்தத்தில் தமது அன்புக்குரியவர்களைப் பறிகொடுத்த உள்ளங்களில் ஏற்பட்ட ரணங்களின் ஆழமோ மதிப்பிட முடியாதது.

பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட கெமர்ரூஜ் ஆட்சியின் பின்னரான கடந்த 31 வருடங்களுக்குப் பிறகு ஏற்பட்ட மிக மோசமான அனர்த்தமாக இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தலைநகர் நாம்பென்னையும் அதிகளவானோரைக் கவரும் வர்த்தக பூங்காவாக மனிதனால் உருவாக்கப்பட்ட டயமண்ட் தீவையும் இணைக்கும் வகையில் பொன்லிசப் ஆற்றுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ள குறுகிய பாலத்தில் ஏற்பட்ட அளவுக்கதிகமான நெரிசலே இவ் அனர்த்தத்திற்கான வெளிப்படையான காரணமாகும்.



ஆனால், குறிப்பிட்டதொரு நேரத்திற்குள் எதிர்பாராத வகையில் இச் சனநெரிசல் எவ்வாறு ஏற்பட்டது என்ற கேள்விக்கான விடையைக் கம்போடிய அதிகாரிகள் தேடிக்கொண்டிருக்கும் நிலையில் பாலத்தின் நடுவே இளைஞர் குழுவொன்றுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களே இவ் அனர்த்தத்திற்கான மூல காரணமென சம்பவ இடத்திலிருந்த சிலர் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் வருடாந்த முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான 'தண்ணீர் திருவிழா' என்ற களியாட்ட நிகழ்வின் இறுதிநாளின் போதே இச் சனநெரிசல் ஏற்பட்டுள்ளது.

மூன்று நாட்கள் கொண்டாடப்படும் இந் நிகழ்வில் பங்குபெற்றுவதற்காக நாடெங்கிலுமிருந்து சுமார் 20 இலட்சம் மக்கள் நாம்பென்னுக்கு வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பாலத்தின் இருபுறத்திலிருந்தும் மக்கள் ஒருவரையொருவர் தள்ளியவாறு முன்னேறிச் செல்ல முயன்ற போது பாலத்தின் மத்தியில் இருந்தவர்கள் சனநெரிசலில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர்.

மின்சாரத்தின் தாக்கம், மூச்சுத்திணறல் மற்றும் உட்காயம் என்பவற்றாலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடும் நெரிசலில் சிக்குண்ட 50 பேர் செய்வதறியாது ஆற்றுக்குள் குதித்ததைத் தொடர்ந்து பதற்றம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

பாலம் உடைந்து விழுகிறது என அஞ்சிய மக்கள் ஒருவரையொருவர் தள்ளியவாறு எதிர்ப்புறத்தை அடைய முயற்சித்து பாலத்தின் மீது ஏறியபோது ஏனையவர்களின் நெருக்கடி தந்த அழுத்தத்தால் பலவந்தமாக ஆற்றுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தவிர பாலத்தை வண்ணமய மின் விளக்குகளால் அலங்கரிப்பதற்காக இணைக்கப்பட்ட மின்சார வயர்களை அந்தரித்த மக்கள் பற்றிப்பிடித்து இழுத்ததினால் ஏற்பட்ட மின்தாக்கமும் அதிகளவான உயிர்களைக் காவு கொண்டுள்ளது.

இவ்வாறாக ஆற்றுக்குள் வீழ்ந்தவர்கள் நீரில் மூழ்கி உயிரிழக்க ஏனையயோர் மின்தாக்கம் மூச்சுத்திணறல் மற்றும் உட்காயம் என்பவற்றால் உயிரிழந்துள்ளனர்.

வர்த்தக நோக்கில் அதிகளவானோரைக் கவரும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த டயமண்ட் தீவு, கண்காட்சி நிலையங்கள், உணவு விடுதிகள் மற்றும் பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டுள்ளது.

இவ்வாறான பண்டிகைக் காலங்களில் இங்கு பொருட்கள் மிக மலிவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் பெண்களும் இளவயதினரும் இங்கு அதிகளவில் படையெடுப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் இளவயதினருமாவர்.

மகிழ்ச்சி ஆரவாரங்கள் திடீரென அலறல் சத்தங்களாக மாறியதாகக் கூறியுள்ள சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் நீரில் குதித்தவர்களில் ஒருவர் கூட உயிருடன் மீளவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் அலறியடித்துக் கொண்டு சிதறி ஓடியவர்களின் சப்பாத்துகள் மற்றும் ஏனைய பொருட்கள் அனைத்தும் அப்பகுதி எங்கும் சிதறிக் கிடக்கும் அதேவேளை, தமது அன்புக்குரியவர்களின் பெயர்களைக் கூவி அழைத்தவாறு அங்கு அலைந்து திரிந்த மக்களின் காட்சி நெஞ்சைக் கசக்கிப் பிழிந்ததாக இச் சம்பவத்தைப் பார்க்கச் சென்ற சுற்றுலாப் பயணியொருவர் கூறியுள்ளார்.

இதேவேளை காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருபவர்களைத் தேடும் உறவினர்கள் ஒருபுறமும் மருத்துவ மனையின் வெளிப்புறத்தில் வைக்கப்பட்டுள்ள உயிரிழந்தவர்களின் புகைப்படங்களில் தமது உறவினர்கள், அல்லது நண்பர்கள் எவராவது இருக்கின்றனரா என்ற அச்சம் தோய்ந்த விழிகளுடன் புகைப்படங்களை ஆராய்ந்து வரும் மக்கள் மறுபுறமுமாக அங்கு தொடர்ந்தும் ஏக்கம் கலந்த சூழ்நிலையே நிலவிவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது அன்புக்குரியவர்கள் இறந்திருக்கலாம் என்பதை சற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத மக்களில் சிலர் காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைகளிலேயே தமது தேடுதலைத் தொடர்ந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகக் கோலாகலமாக ஆரம்பமான தண்ணீர் திருவிழா என்னும் களியாட்ட நிகழ்வு மறக்க முடியாத துயரத்தை பல்லாயிரக்கணக்கான உள்ளங்களில் பதிவு செய்தவாறு முடிவடைந்துள்ளது.

இத் திருவிழாவுக்காக பல இலட்சம் பேரைக் கவர்ந்திழுத்த தலைநகர் நாம்பெனில் தற்போது அம்புலன்ஸ் ஒலிகளையும் ஏக்க விழிகளையும் தவிர எதனையும் உணரமுடியாத மயான அமைதி நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இத் திருவிழாவில் மக்கள் கலந்து கொண்டதனால் உயிரிழந்தவர்களின் உடல்களை அவர்களது உறவினர்கள் பொறுப்பேற்க சிலநாட்கள் எடுக்கலாமென அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமையை தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தியிருந்த பிரதமர் ஹுன்சென் இச் சம்பவம் தொடர்பான முழு விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளார்.

அருகருகே இரு கார்கள் பயணிப்பதற்கு போதுமான இடவசதியையே கொண்டிருந்த இப்பாலத்தில் அளவுக்கதிகமானவர்களை அனுமதித்தது தொடர்பிலும் பல குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன.

இப்பாலத்திலிருந்தவர்களில் பெரும்பாலானோர் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்தவர்களாவர். இது இயற்கையாகவே அசைந்தாடும் ஒரு தொங்குபாலமென்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. இதனால் பாலம் அசைவதை உணர்ந்த மக்கள் பாலம் இடிந்துவிழப்போகிறது என அஞ்சி முண்டியடித்துக் கொண்டு மக்கள் ஓட முயற்சித்தபோதே சனநெரிசல் ஏற்பட்டுள்ளதென விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

எது எப்படியிருப்பினும் வருடாவருடம் கோலகலமாகக் கொண்டாடப்படும் இத் திருவிழாவில் இடம்பெற்ற இவ் அனர்த்தம் மக்களின் மனங்களைவிட்டு விரைவில் நீங்கப்போவதில்லை.

இதனால் எதிர்வரும் காலங்களில் இத் திருவிழாவுடன் உயிரிழந்தவர்களின் நினைவு தினமும் அனுஷ்டிக்கப்படுமென்பதால் முன்னைய காலங்களைப் போல இத் திருவிழா களைகட்டுமா என்ற கேள்வி எழுவது இயல்பானதே.

இந்நிலையில் கம்போடியாவின் வரலாற்றில் மற்றொரு துன்பியல் நிகழ்வாக பதிவு செய்யப்பட்டிருக்கும் இவ் அனர்த்தமானது அளவுக்கதிகமான மக்கள் கூடும் இடங்களில் எல்லாம் போதிய பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் சுயபாதுகாப்பு சிந்தனையையும் ஒவ்வொருவருக்கும் உணர்த்தியுள்ளது.

இந்தப் படிப்பினையின் மூலம் இவ்வாறான அநியாயமான உயிரிழப்புகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஒவ்வொரு அரசாங்கத்தினதும் க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூனம் பஜ்வா

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, [illegible] இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org